# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## ஆண்டறிக்கை

## 2002-2003

தமிழ்நாடு அரசு அச்சுத்துறை இயக்குநரால் தமிழ்நாடு அரசுக்காக
பதிப்பிக்கப்பெற்றது

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## ஆண்டறிக்கை - 2002-2003

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
## ஆண்டறிக்கை 2002-2003
### பொருளடக்கம்


| வரிசை எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | செயல்களும் கடமைகளும் | 2 - 4 |
| 2 | நேரடித் தேர்வுகள் | 4 - 6 |
| 3 | தகுதியும் பொருத்தமும் உடைய வேட்பாளர்கள் இல்லாமை | 6 |
| 4 | பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலம் தெரிவு செய்தல். ஒழுங்கு நடவடிக்கை. முறையீடுகள். மனுக்கள். சட்ட முறை ஒழுங்கு முறை விதிகள். தற்காலிக நியமனங்கள். விதி தளர்த்தல் முதலியன | 6 - 9 |
| 5 | தெரிவுத் தேர்வுகள் அல்லாத எழுத்துத் தேர்வுகள் | 9 |
| 6 | அரசும் தேர்வாணையமும் | 10 - 22 |
| | பின் இணைப்புகள் | |
| 1 | தேர்வாணையத்தின் பணியாளர் பட்டியல் | 24 |
| 2 | நேரடித் தேர்வு வெளியிடப்பட்ட முடிவுகள் புள்ளி விவரம் | 25 - 26 |
| 3 | வருவாய் மற்றும் செலவு | 27 |
| 4 | வெளியான அறிவிக்கை விளம்பரங்கள் | 28 |
| 5 | எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு விவரம் | 28 - 30 |
| 6 | பொருத்தமும் தகுதியும் உடைய வேட்பாளர்கள் இல்லாத பணிகள் குறித்து விவரம் | 31 |
| 7 | பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலம் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்ட பதவிகள் | 32 - 33 |
| 8 | ஒழுங்கு நடவடிக்கைகள். மனுக்கள் மற்றும் முறையீடுகள் விவரம் | 34 - 35 |
| 9 | தேர்வாணையத்தின் ஒழுங்கு முறை விதி 1954 விதி 16(பி) பிற்பகுதியின் கீழ் நியமனங்கள். முறைப்படுத்தியதன் விவரம் | 35 - 36 |
| 10 | தற்காலிக நியமனங்கள் மாநிலப் பணி/சார்நிலைப் பணி/அமைச்சுப் பணிகள் 24 மாதங்களுக்கு மேல் இசைவு அளித்த விவரம் | 37 |
| 11 | அரசு தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டது மற்றும் தேர்வாணையத்தை கலந்தாலோசிக்கப்படாதவை குறித்து கடந்த ஐந்து ஆண்டுகளுக்கானப் புள்ளி விவரம் | 37 |
| 12. | வரைபடங்கள் | 38 - 39 |

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## ஆண்டறிக்கை 2002-2003

முன்னுரை :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், இந்திய அரசியலமைப்புப் பிரிவு 315-இன் படி அமைக்கப்பட்டுள்ளது. தேர்வாணையத்தில் தலைவர் ஒருவர், உறுப்பினர் பதினொன்று என்பது ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையாகும். தற்போது தலைவரும், நான்கு உறுப்பினர்களும் உள்ளனர்.

இவ்வாண்டிற்கான தேர்வாணையத்தின் கூட்டமைப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| திருமதி. யாஸ்மீன் அகமது, இ.ஆ.ப. (ஓய்வு) | தலைவர் |
| திரு. ஆர்.வேலு, இ.ஆ.ப. (ஓய்வு)<br>(14.07.2002 பி.ப. உறுப்பினர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்) | உறுப்பினர் |
| திரு. ஆர். குருசாமி, பி.ஏ.,பி.எல்..,<br>(14.07.2002 பி.ப. உறுப்பினர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்) | உறுப்பினர் |
| பேராசிரியர். ஜி. அரங்கநாதன், எம்.ஏ.,எம்.பில்.,<br>(14.07.2002 பி.ப. உறுப்பினர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்) | உறுப்பினர் |
| பேராசிரியர். டாக்டர். எஸ். பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி., டி.எஸ்.எஸ்.,<br>(16.07.2002 பி.ப. உறுப்பினர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்) | உறுப்பினர் |
| திரு. எம். மணி, இ.கா.ப., (ஓய்வு)<br>(21.01.2003 பி.ப. உறுப்பினர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்) | உறுப்பினர் |
| திரு. வ. அழகுசுந்தரம், எம்.எஸ்.ஸி., | உறுப்பினர். |
| டாக்டர். இரா. பெருமாள் சாமி, எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி., | உறுப்பினர் |
| டாக்டர். (திருமதி) கு. ம. இராமாத்தாள், எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி., | உறுப்பினர் |
| திரு. இரா. தமிழ்மணி, பி.ஏ.,பி.எல்., | உறுப்பினர் |
| | |
| திரு. ஹேமந்த் குமார் சின்ஹா, இ.ஆ.ப.<br>(02.12.2002 பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்) | செயலாளர் |
| திருமதி. சந்தியா வே. சர்மா, இ.ஆ.ப.<br>(02.12.2002 முதல் கூடுதலாக செயலாளர் பொறுப்பையும் ஏற்றார்,) | தேர்வுக் கட்டுப்பாடு அலுவலர் |

மார்ச் 31, 2003-இன் நிலையில் தேர்வாணையத்தின் பணியாளர் விபரம் பின் இணைப்பு-1இல் கொடுக்கப்பட்டுள்ளது.

# பகுதி-1

**செயல்களும் கடமைகளும்:**

தேர்வாணையம் ஆற்ற வேண்டிய பணிகள் என்ன என்பதன் விபரங்கள் இந்திய அரசியல் அமைப்புப் பிரிவு 320-இல் குறிப்பிடப்பட்டுள்ளன,

மாநிலப் பணிகளில் பணி நியமனம் பெற உரிய தேர்வுகளைத் தேர்வாணையம் நடத்த வேண்டும். மேலும் மாநில அரசு, தன் பணியாளர்களை எந்த முறையில் தேர்ந்தெடுத்து நியமிக்க வேண்டும், பணி விதிகள் உருவாக்குதல் மற்றும் மாற்றம் செய்தல், ஒரு பதவிக்கு, பதவி உயர்வு மற்றும் பணி மாற்றம் மூலம் நியமனம் செய்வதில் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள், அரசு ஊழியர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல், பணியாளர்களுக்குப் பணிக்காலத்தில் ஏற்படும் செலவினம் மற்றும் தீங்குகளுக்கான இழப்பீடு வழங்குவதில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் ஆகிய பொருள்கள் குறித்தும் தேர்வாணையத்தினைக் கலந்தாலோசித்து முடிவெடுக்க வேண்டும். அரசு ஊழியர்களுக்கான துறைத் தேர்வுகளை தேர்வாணையம் நடத்துகின்றது. இந்திய அரசுப் பாதுகாப்புத்துறை சார்பாக டேராடூனில் உள்ள இந்தியப் பாதுகாப்புக் கல்லூரியில் சேருவதற்கான தேர்வையும் தேர்வாணையம் நடத்துகின்றது.

**வேலைப் பளு :**

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் செய்து முடித்த தேர்வுப்பணி விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**I. நேரடித் தேர்வு :**

1. முதல் நிலைத் தேர்வு : - ஏதுமில்லை -

2. முதன்மை எழுத்துத் தேர்வு :-

| | | |
|---|---|---|
| தேர்வுகளின் எண்ணிக்கை | : | 5 |
| காலியிடங்களின் எண்ணிக்கை | : | 117 |
| தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள் | : | 38,057 |

3. நேர்முகத் தேர்வு : -

| | | |
|---|---|---|
| தேர்வுகளின் எண்ணிக்கை | : | 13 |
| காலியிடங்களின் எண்ணிக்கை | : | 262 |
| தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள் | : | 710 |

4. இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் -

| | | |
|---|---|---|
| முடிவு செய்த தேர்வுகளின் எண்ணிக்கை | : | 13 |
| காலியிடங்களின் எண்ணிக்கை | : | 366 |
| தெரிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை | : | 360 |

## II. இதர தேர்வு விவரங்கள்:

1. துறைத் தேர்வு

| | | மே 2002 | டிசம்பர் 2002 |
|---|---|---|---|
| விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை | : | 56,667 | 46,384 |
| வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை | : | 16,788 | 15,058 |

2. அரையாண்டுத் தேர்வு

| | | |
|---|---|---|
| 2002 ஆம் ஆண்டு செப்டம்பர் தேர்வில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை | : | 48 |
| 2003 ம் ஆண்டு மார்ச் தேர்வில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை | : | 39 |

3. கல்வித் தகுதி/வயது முதலியவற்றில் விதி தளர்த்தியது : 69 நேர்வுகள்,

4. பணி மாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலம் தெரிவு செய்தல் . 1064 நபர்கள்,

5. ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிரந்தர மாறுதல் அளித்தல் -அமைச்சுப் பணியில் : 96 நபர்கள்.

6. ஒழுங்கு நடவடிக்கை -அரசுக்குத்தேர்வாணையத்தின் கருத்து தெரிவித்த வழக்குகள் : 457 நேர்வுகள்.

7. ஒழுங்கு முறை விதி 16(பி) பிற்பகுதியின் கீழ் நியமனம் செய்ய இசைவு அளிக்கப்பட்டவை. : 972 நேர்வுகள்.:

8. வரவு மற்றும் செலவு (ரூபாய் ஆயிரங்களில்)

| | |
|---|---|
| வரவு | 75,17 |
| செலவு | 9,71,38 |

வரவு மற்றும் செலவின விவரங்கள் பின் இணைப்பு -3ல் கொடுக்கப்பட்டுள்ளது.

9. அறிவிக்கைகள் :

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் மாநிலத்தில் பல்வேறு பணிகளில் 4 பதவிகளுக்கான காலியிடங்களுக்கு விண்ணப்பங்களைக் கோரி 4 அறிவிக்கை விளம்பரங்களை வெளியிட்டது அப்பதவிகளின் காலியிடங்களின் எண்ணிக்கை 226. விண்ணப்பித்தவர்கள் 1,35,786 ஆகும், வெளியிடப்பட்ட 4 பதவிகளுக்கான அறிவிக்கைப் பட்டியல், 226 காலியிடங்களின் எண்ணிக்கையுடன் உள்ள விவரங்கள் பின் இணைப்பு - 4 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பு:- மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை விளக்கும் வரைபடங்கள் பின் இணைப்பு -12ல் கொடுக்கப்பட்டுள்ளன

10. சீர்திருத்தம் மற்றும் புதிய மாற்றங்கள் :

மற்ற ஒத்த பணியமைப்பு உடைய நிறுவனங்களில் ஏற்படும் முன்னேற்றங்களையும், தேர்வு முறைகளில் ஏற்படும் மாற்றங்களையும் இத் தேர்வாணையம் அவ்வப்பொழுது ஆராய்ந்து தனது தெரிவு முறைகளில் உரிய மாற்றங்களைச் செய்து வருகிறது.

1. தேர்வாணையம் நேரடித் தெரிவுகளின் தேர்வு முறைகளை ஒழுங்குபடுத்தவும், தேர்வுக் காலங்களின் நேரத்தை குறைக்கவும், அதற்கான செலவை குறைக்கவும். தேர்வுகளின் முடிவுகளை குறைந்த கால அளவில் வெளியிடவும் ஆய்வு மேற்கொள்ள குழு ஒன்றை ஏற்படுத்தியது. இக்குழு கேரளா அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு சென்று ஆய்வு மேற்கொண்ட பின்னர் அறிக்கை ஒன்றினை அளித்தது.

அக்குழுவின் ஆய்வு அறிக்கையின் பரிந்துறையை தேர்வாணையம் பல முறை விவாதம் செய்து அதன் அடிப்படையில், பெறும்பாலான தேர்வுகளுக்கு ஓரே தாள் கொள் குறி வகையில் தேர்வு வைக்கலாம் என பரிந்துறை செய்தது இத் தேர்வு முறையிலிருந்து தொகுதி-1 பணிகளின் முதன்மைத் தேர்வு, உரிமையியல் நீதிபதி மற்றும் உதவி அரசு வழக்குறைஞர் நிலை-2 ஆகிய பணிகளின் தேர்வுகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

2 தொகுதி-1 பணிகளின் முதன்மைத் தேர்விற்கு பொது அறிவு பாடத்தின் பாட அமைப்பு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பொது அறிவு பாட அமைப்பு, தொகுதி-1 பணிகளின் முதனிலைத் தேர்வு மற்றும் பிற தொழில் நுட்பம் இல்லாத பதவிகளுக்கும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## பகுதி-2

### நேரடித் தெரிவுகள்:

அறிக்கைக்குரிய ஆண்டில் 117 காலியிடங்களுக்கான 5 தெரிவுகளில் முதன்மை எழுத்துத் தேர்வுகள் நடத்தப்பட்டன. 38,057 விண்ணப்பதாரர்கள் முதன்மைத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர். 262 காலியிடங்கள் அடங்கிய 13 தெரிவிற்கு நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. 710 விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர், தேர்வாணையம் இறுதியாக 13 தெரிவுகளுக்கு முடிவினை அறிவித்தது. 366 காலியிடங்களுக்கு இறுதியாக 360 விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்தது. இறுதி முடிவு செய்த 13 தெரிவுகளின் புள்ளி விவரம் பின் இணைப்பு - 2ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அறிக்கைக்குரிய ஆண்டில் முடிக்கப்பட்ட சில முக்கியப் பதவிகளின் தெரிவு விபரம்

| வரிசை எண் (1) | பதவியின் பெயர் (2) | காலியிடங்களின் எண்ணிக்கை (3) | தெரிவு செய்யப்பட்ட நபர்கள் (4) |
|---|---|---|---|
| 1 | வேளாண்மை அலுவலர் (விரிவாக்கம்) மற்றும் வேளாண்மை அலுவலர் (வேதியியல்) | 119 | 119 |
| 2 | உரிமையியல் நீதிபதி | 18 | 16 |
| 3 | உதவி மருத்துவ அலுவலர் (சித்தா/ஆயுர்வேதா/யுனானி ) | 47 | 47 |
| 4 | உதவி மருத்துவ அலுவலர் (சித்தா/ஆயுர்வேதா/யுனானி ) | 89 | 85 |
| 5 | தொகுதி - I பணிகள் | 74 | 74 |
| 6 | மாவட்ட கல்வி அலுவலர் | 9 | 9 |

## தொகுதிப் பணிகள்

### தொகுதி ஒன்று பணிகள்

(அ) தேர்வாணையம் தொகுதி ஒன்று பணியில் 99 காலியிடங்களுக்கு 27-12-2000 அன்று விளம்பரப்படுத்தியது. 1,06,650 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. முதனிலைத் தேர்வு 10.06.2001 அன்று நடைபெற்றது. முதன்மைத் தேர்வு 09.02.2002 முதல் 13.03.2002 வரை நடைபெற்றது.

### ஒருங்கிணைந்த சார்நிலைப் பணிகள் - I :

(அ) தேர்வாணையம் ஒருங்கிணைந்த சார்நிலைப் பணிகள் - I ல் 22 காலியிடங்களை நிரப்ப 14.11.2002 அன்று விளம்பரப்படுத்தியது. அதற்கு 36,171 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. முதன்மைத் தேர்வு 01.03.2003 முதல் 02.03.2003 வரை நடைபெற்றது.

### தொகுதி - VIII பணிகள்.

(அ) தேர்வாணையம் தொகுதி- VIII பணியில் 76 காலியிடங்களை நிரப்ப 22-11-2002 அன்று விளம்பரப்படுத்தியது. அதற்கு 93,899 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. முதன்மைத் தேர்வு 12.04.2003 முதல் 13.04.2003 வரை நடைபெற்றது.

### முதன்மை எழுத்துத் தேர்வுகள் :

அறிக்கைக்குரிய ஆண்டில் பல்வகைப் பணிகளில் 117 காலியிடங்களை நிரப்புவதற்கு 5 முதன்மை எழுத்துத் தேர்வுகள் நடத்தப்பட்டன. இத்தேர்வுகளுக்கு 38,057 விண்ணப்பதாரர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

<u>வாய்மொழித் தேர்வுகள் :</u>

அறிக்கைக்குரிய ஆண்டில் பல்வேறு பதவிகளில் 262 காலியிடங்களை நிரப்ப 13 பதவிகளுக்கு வாய்மொழித் தேர்வுகள் நடத்தப்பட்டன. நடப்பு ஆண்டில் 18 வேலை நாட்களில் தேர்வாணையம் நேர்முகத் தேர்வுகளை நடத்தியது. நேர்முகத் தேர்வுகளை முற்பகல் மற்றும் பிற்பகல் என இரு அமர்வுகளாக அமைக்கப்பட்டு நடந்தன சில நாட்களில் அதிகபட்சமான 6 குழுமங்கள் முற்பகலும் மற்றும் பிற்பகலும் இயங்கின மொத்தம் 114 நேர்முகத் தொடர்கள் நடத்தப்பட்டன. 710 விண்ணப்பத்தாரர்கள் நேர்முகத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர்.

2002-2003 ஆம் ஆண்டில் நடந்த முதல்நிலை, முதன்மை எழுத்துத் தேர்வுகள் மற்றும் வாய் மொழித் தேர்வின் விபரங்கள் பின் இணைப்பு -5ல் கொடுக்கப்பட்டுள்ளன

## பகுதி-3

### தகுதியும் பொருத்தமும் உடைய விண்ணப்பதாரர்கள் இல்லாதப் பதவிகள்:

அறிக்கைக்குரிய ஆண்டில் 6 காலியிடங்களுக்குத் தகுதியும் பொருத்தமும் உடைய விண்ணப்பதாரர்கள் கிடைக்காமையால் அவை நிரப்பப்படவில்லை.

| வ.எண் | பதவியின் பெயர் | ஆதி | பழ | மி.பி.வ, | பி.வ | பொ.போ | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | உரிமையியல் நீதிபதி தமிழ்நாடு மாநில நீதிப்பணி | - | 2 | - | - | - | 2 |
| 2. | உதவி மருத்துவ அலுவலர் (யுனானி) | 2 | - | 2 | - | - | 4 |
| | கூடுதல் | 2 | 2 | 2 | - | - | 6 |

இதன் விபரம் பின் இணைப்பு - 6 ல் கொடுக்கப்பட்டுள்ளது

## பகுதி - 4

### பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலமாகத் தெரிவு செய்தல். ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்ட வழக்குகள், முறையீடுகள், மனுக்கள், சட்டமுறை, ஒழுங்குமுறை விதிகள், தற்காலிக நியமனங்கள் முதலியன.

1. பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலமாகத் தெரிவு செய்தல் :

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் மாநிலப் பணிகளில் தொடர்புடைய சார் நிலைப் பணிகளிலிருந்து பணி மாற்றம் மூலம் தெரிவு செய்தல் மற்றும் மாநில பணிகளுக்கிடையே பதவி உயர்வு மூலம் தெரிவு செய்தல் ஆகிய பொருள் குறித்த குறிப்பீடுகளை ஆய்வு செய்தது. அவ்வகையில் 20 பணிகளில் 1064 தகுதியும், பொருத்தமும் உடைய நபர்களைத் தெரிவு செய்தது இதன் விபரம் பின் இணைப்பு-7ல் கொடுக்கப்பட்டுள்ளது

2. ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்ட வழக்குகள், முறையீடுகள், மனுக்கள் முதலியன :

அ. I. செயல்நடவடிக்கை மேற்கொண்ட வழக்குகள் 1361
(சென்ற ஆண்டு ஏப்ரல் திங்கள் 2002-ல் நிலுவையில் இருந்த 228 வழக்குகள் உட்பட)

II. (i). தேர்வாணையம் கருத்துத் தெரிவித்த வழக்குகள் 677

(ii) தேர்வாணையத்தின் ஆய்வில் உள்ள வழக்குகள் 176

(iii) உரிய நடைமுறைகளைப் பின்பற்றி அனுப்புமாறு அரசுக்குத் திருப்பியது, 33

(iv) சில ஆவணங்கள் அல்லது விபரங்கள் அரசிடம் கேட்கப்பட்ட வழக்குகள் 475

III. வழங்கப்பட்ட தண்டனையில் மாற்றம் செய்யுமாறு பரிந்துரை செய்யப்பட்ட வழக்குகள் 28

ஆ. I) அரசுக்குத் தேர்வாணையத்தின் கருத்துத் தெரிவிக்கப்பட்ட வழக்குகள் 457

II) அவற்றில் அரசு நடவடிக்கை எடுத்து ஆணைப்பிறப்பித்த வழக்குகள் 247

III) அரசு நடவடிக்கை எடுக்க நிலுவையில் உள்ள வழக்குகள் 210

இ. ஒழுங்கு நடவடிக்கை வழக்குகளில் காலச் செலவழிவு

| | | | |
|---|---|---|---|
| 1) | மொத்த வழக்குகளின் எண்ணிக்கை | 247 | |
| | | மாதம் | நாட்கள் |
| 2) | குற்றச்சாட்டுக்குறிப்பாணை அனுப்பிய நாளில் இருந்து தேர்வாணையத்திற்கு அதன் கருத்தைக்கோர அரசு எடுத்துக் கொண்ட சராசரிக் காலம் | 10 | 5 |
| 3) | தேர்வாணையம் அரசுக்கு தனது கருத்தைத் தெரிவிக்க எடுத்துக் கொண்ட சராசரிக் காலம் | 2 | 0 |
| 4) | தேர்வாணையம் தனது கருத்தினை அனுப்பிய பிறகு ஆணை பிறப்பிக்க அரசு எடுத்துக் கொண்ட சராசரிக் காலம் | 11 | 5 |
| | எடுத்துக் கொண்ட(கொள்ளப்பட்ட) மொத்த சராசரிக் காலம் | 23 | 10 |

மேல்முறையீட்டு மனு, மறு ஆய்வு மனு, ஒழுங்கு நடவடிக்கை, ஓய்வூதியத்தில் பிடித்தம் செய்தல் அல்லது குறைப்பு ஆகியவைகளில் அலுவலர்கள் தமது நேர்மைக்குப் புறம்பாக நடந்து கொண்ட வகையில் சாட்டப்பட்டக் குற்றச்சாட்டுகள் மற்றும் வேறு வகையில் சாட்டப்பட்டக் குற்றச்சாட்டுகள்கொண்ட வழக்குகள் என 457 வழக்குகளின் விபரம் பின் இணைப்பு -8ல் கொடுக்கப்பட்டுள்ளது.

3. சட்டமுறை, ஒழுங்குமுறை விதிகள் முதலியன:

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகள் 1954-ல் ஒழுங்குமுறை விதி 16(பி) பிற்பகுதியின்படி, தேர்வாணையத்தின் இசைவுக் கேட்கப்பட்டு 972 நிகழ்வுகளில் மாநில, சார்நிலை மற்றும் அமைச்சுப் பணிகளில் நியமனம் செய்ய இசைவு அளிக்கப்பட்டது. எந்த நிகழ்விலும் தேர்வாணையம் தன் இசைவினை மறுக்கவில்லை.

| வரிசை எண் (1) | பணி வகை (2) | இசைவு அளிக்கப்பட்டவை (3) | இசைவு மறுக்கப்பட்டவை (4) |
|---|---|---|---|
| 1 | மாநிலப் பணி | 9 | - |
| 2. | சார்நிலைப் பணி | 1 | - |
| 3 | அமைச்சுப்பணி | 962 | - |
| | கூடுதல் | 972 | - |

எப்பணிகளில் எந்தெந்தப் பதவிக்கு இசைவு அளிக்கப்பட்டது அல்லது மறுக்கப்பட்டது என்பதன் விவரங்கள் பின் இணைப்பு -9ல் கொடுக்கப்பட்டுள்ளது.

### 4. தற்காலிக நியமனங்கள்:

கீழே குறிப்பிட்டுள்ளவாறு மாநிலத்தின் பல்வகைப் பணிகளில் பல்வகைப் பதவிகளுக்கு இரண்டு நபரை தற்காலிகமாக நியமனம் செய்து அந்நியமனங்கள் 24 மாதங்கள் வரை தொடர்வதற்குத் தேர்வாணையத்தின் இசைவு அளிக்கப்பட்டுள்ளது, 12 நபர்களின் நியமனம் 24 மாதங்களுக்கு மேல் தொடர அனுமதிக்கப்பட்டுள்ளது.

| | இசைவு அளிக்கப்பட்டது | | இசைவு மறுக்கப்பட்டது | |
|---|---|---|---|---|
| காலம் (1) | மாநிலப் பணிகள் (2) | சார்நிலை/ அமைச்சுப் பணிகள் (3) | மாநிலப பணிகள (4) | சார்நிலை/ அமைச்சுப் பணிகள் (5) |
| 3 மாதங்களுக்கு மேல் 12 மாதங்களுக்குள் | - | - | - | - |
| 12 மாதங்களுக்கு மேல் 18 மாதங்களுக்குள் | - | - | - | - |
| 18 மாதங்களுக்கு மேல் 24 மாதங்களுக்குள் | - | 2 | - | - |
| 24 மாதங்களுக்கு மேல் | - | 12 | - | - |
| கூடுதல் | - | 14 | - | - |

24 மாதங்களுக்கு மேலும் தற்காலிக நியமனங்கள் தொடரத் தேர்வாணையம் 12 நேர்வுகளில் இசைவு அளித்தமை குறித்த விவரங்கள் பின் இணைப்பு 10-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

### 5. விதி 20 (எ) (3)-ன் படி இசைவு அளிக்கப்பட்டவை.:

தமிழ்நாடு அமைச்சுப் பணிசிறப்பு விதி 20 (எ) (3)-ன் படி அமைச்சுப் பணியில் மாநிலத்தில் ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிரந்தர மாறுதலுக்கு தேர்வாணையத்தால் இசைவு அளிக்கப்பட்டுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை 96 ஆகும் எந்த நேர்விலும் இசைவு மறுக்கப்படவில்லை.

### 6. விதிகள் பிறப்பித்தல் மற்றும் திருத்தம் வெளியிடல் :

அரசால் 166 நேர்வுகளில் சட்டமுறை விதிகள் அல்லது திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன 161 நேர்வுகளில் தேர்வாணையம் கலந்தறியப்பட்டது. 5 நேர்வுகளில் தேர்வாணையத்தின் கருத்து கேட்டறியப்படவில்லை. அவை தேர்வாணையத்தின் உள்ளீட்டு எல்லைக்கு உட்படாதவையாகவோ அல்லது இந்திய அரசியல் அமைப்பு 320 (3)-ன் படி தேர்வாணையத்தினைக் கலந்தறியத் தேவையில்லாதவையாகவோ அமைந்துள்ளன.

7. விதி தளர்த்துதல்:
அறிக்கைக்குரிய ஆண்டில் 63 நேர்வுகளில் வயது அல்லது கல்வித் தகுதி குறித்த சட்ட முறை விதிகள் அரசால் தளர்த்தப்பட்டன. 3 நேர்வுகளில் ஒய்வூதிய விதிகளைத் தளர்த்தி ஆணையிட்டுள்ளது. அடிப்படை விதிகள், தமிழ்நாடுச் சிறப்பு ஊதியப்படி விதிகள் மற்றும் பயணப்படி விதிகள் ஆகியவற்றில் ஒரு நேர்வில் விதியைத் தளர்த்தி ஆணையிட்டுள்ளது. மேலும் எந்த நேர்விலும் மதராஸ் பொது வருங்கால வைப்புநிதி விதிகளைத்தளர்த்தி ஆணையிடவில்லை.

## பகுதி - 5

## தெரிவுத் தேர்வுகள் தவிர இதரத் தேர்வுகள்

### 1) துறைத் தேர்வுகள்:

2002-ஆம் ஆண்டு மே மற்றும் ~~நவம்பர்~~ டிசம்பர் திங்களில் துறைத் தேர்வுகள் நடைபெற்றன. 220 பாடங்களில் தேர்வுகள் நடத்தப்பட்டன. அத் தேர்வுகளுக்கு1,03,051 நபர்கள் விண்ணப்பித்தனர்.

| வ.எண் | விபரம் | மே - 2002 | டிசம்பா-2002 |
|---|---|---|---|
| 1 | மொத்தப் பாடங்கள் | 115 | 105 |
| 2 | தேர்வுத் தாட்களின் எண்ணிக்கை | 143 | 135 |
| 3. | விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை | 56,667 | 46,384 |
| 4 | தேர்வில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை | 40,228 | 32,573 |
| 5 | தேர்ச்சிப் பெற்றவர்களின் எண்ணிக்கை | 16,788 | 15,058 |
| 6 | தேர்ச்சி சதவீதம் | 42 | 46 |

2) அரையாண்டுத் தேர்வுகள்:

உதவி ஆட்சியாளர், துணைஆட்சியாளர், காவல் துறை அலுவலர் மற்றும் வனத்துறை அலுவலர் ஆகியோருக்கான அரையாண்டுத் தேர்வு மற்றும் முதல்நிலைத் தமிழ் மொழித் தேர்வு செப்டம்பர் 2002 மற்றும் மார்ச் 2003 -ல் நடத்தப்பட்டன. இவற்றில் முறையே 48 மற்றும் 39 அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

3) சிறப்புத் தமிழ்த் தேர்வு:
தமிழைத் தாய்மொழியாக, பெறாத அகில இந்தியப் பணியைச் சேர்ந்த அலுவலர்களுக்கான சிறப்புத் தமிழ்த் தேர்வு செப்டம்பர்-2002-ல் விளம்பரப்படுத்தப்பட்டது. அதற்கு ஒருவரும் விண்ணப்பிக்கவில்லை.

4) டேராடூன் இந்தியப் பாதுகாப்புக் கல்லூரிப் பள்ளியில் சேருவதற்கான தேர்வை இத்தேர்வாணையம் இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்திற்காக ஆகஸ்டு 2002 மற்றும் பிப்ரவரி 2003-ல் நடத்தியது. அதற்கு 182 மற்றும் 161 மாணவர்கள் முறையே கலந்துகொண்டனர்.

# பகுதி - 6

## அரசும் தேர்வாணையமும்

**அ.** தேர்வாணையக் கருத்தை அரசு ஏற்காமை:

அறிக்கைக்குரிய ஆண்டில் அரசு தேர்வாணையத்தின் கருத்துரையில் இருந்து 12 வழக்குகளில் மாறுபட்டுள்ளது. இதன் விவரம் பின்வருமாறு:-

வழக்கு -1

2000 - ஆண்டு ஏப்ரல் திங்களில் அரசு, பொதுப் பணித்துறையில் இளநிலைப் பொறியாளராகப் பணியாற்றிய ஒருவர் அப்பணியில் புரிந்த குற்றங்கட்காக அவர் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை தொடர்பாக இறுதியாணை பிறப்பிப்பதற்காக அரசு தேர்வாணையத்தின் கருத்துக்களை தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் விதி 18 (1) (பி) (ii) -ன் கீழ் கோரியது. இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் அறந்தாங்கி உட்கோட்டத்தில் 1987-88-ல் பணியாற்றிய போது அவரால் புரியப்பட்ட குற்றங்கட்காக முதன்மைப் பொறியாளர் மற்றும் பொதுப்பணித்துறை, தலைமைப் பொறியாளர் (பொது), சென்னை அவர்களால் மூன்று குற்றச்சாட்டுகள் தமிழ்நாடு குடிமுறைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17 (பி)-ன் கீழ் பிறப்பிக்கப்பட்டன. குற்றம் சாட்டப்பட்டவரால் குற்றச்சாட்டுக்கள் மறுக்கப்பட்டு விளக்கம் அளிக்கப்பட்டது. இவ்வழக்கில் விசாரணை நடத்தப்பட்டு, விசாரணை அலுவலரின் அறிக்கை அன்னாருக்கு அனுப்பப்பட்டு, அவருடைய கூடுதல் விளக்கம் பெறப்பட்டது.

'அரசு இவ்வழக்கினை கவனமாகப் பரிசீலித்து, நிரூபணமான குற்றச்சாட்டுகளுக்கு தண்டனையாக ஒரு வருட காலம் திரண்ட பயனில்லாமல் ஊதிய உயர்வு நிறுத்தம் செய்யப்படவும், அரசுக்கு ஏற்பட்ட இழப்புத் தொகையின் வீதப்படியான ரூ 22,730/-ஐ (அரசுக்கு ஏற்பட்ட மொத்த இழப்பு ரூ.45460/-) அன்னாரிடமிருந்து பிடித்தம் செய்யபடவும் ஒரு தற்காலிக முடிவெடுத்து, இவ்வொழுங்கு நடவடிக்கையின் மீது பிறப்பிக்கப்பட வேண்டிய இறுதியாணை குறித்து, தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது.

இவ்வழக்கினை நன்கு ஆய்வு செய்த தேர்வாணையம், குற்றம் சாட்டப்பட்டவர் வயது முதிர்வு காரணமாக அது சமயம் கூடிய விரைவில் பணியிலிருந்து ஓய்வு பெற இருந்த நிலையில், அடுத்த ஊதிய உயர்வு நாள் அன்னார் பணியிலிருந்து ஓய்வுபெற வேண்டிய நாளுக்குப் பிறகே அமைந்தபடியால், மேற்கூறப்பட்ட தண்டனை வழங்கப்பட இயலாது என்பதை சுட்டிக்காட்டியதுடன், குற்றம் சாட்டப்பட்டவரின் நீண்ட காலப் பணியைக் கருத்திற்கொண்டு தொகைப் பிடித்தம் செய்யப்படுவதுடன், அன்னாருக்கு 'கண்டனம்' எனும் தண்டனை வழங்கப்படலாம் என் தேர்வாணையம் 2000-ம் ஆண்டு நவம்பர் திங்களில் அரசுக்கு அறிவுரை வழங்கியது.

ஆனால், அரசு இதன் பின்னர் குற்றம் சாட்டப்பட்டவருக்கெதிரான ஒழுங்கு நடவடிக்கையை தமிழ்நாடு ஓய்வூதிய விதிகளின் கீழ் தொடர்ந்து, அரசு ஆணை (டி) எண். 214, பொதுப்பணித் துறை, நாள் 09.05.2002-ன் மூலம் குற்றம் சாட்டப்பட்டவரின் மாத ஓய்வூதியத்திலிருந்து ரூ.200/- வீதம் ஒரு வருடத்திற்கு பிடித்தம் செய்யப்படவும், மேற்கூறப்பட்ட இழப்பு தொகையான ரூ.22,730/-ஐ இறப்பு-ஓய்வு-பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யப்படவும், இறுதி ஆணை பிறப்பித்தது. இவ்வாணையினை பிறப்பித்ததன் மூலம் அரசு, தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்காமல் தன்னிச்சையாக செயல்பட்டு, தேர்வாணையக் கருத்திற்கு மாறுபட்டு முடிவு எடுத்துள்ளது.

வழக்கு -2

சென்னை மத்திய சிறைக் கண்காணிப்பாளருக்கு வழங்கப்பட்ட 'கண்டனம்' என்ற தண்டனையை எதிர்த்து அரசுக்கு அவர் அளித்த மேல்முறையீட்டின் மீது 2002-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தேர்வாணையத்தின் கருத்தினை அரசு கோரியது.

தேர்வாணையம், மேற்கூறப்பட்ட வழக்கின் தன்மையை ஆராய்ந்து தேர்வாணையக் கருத்துக்களை அரசுக்கு தனது 27.08.2001 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்தது.

மேல்முறையீட்டாளரின் கூற்றானது பிளாக் -2-ல் சிறைக் கைதிகள் 26.10.2000 மாலை 4.00 மணிக்கு கைப்பந்து விளையாடும்போது ஏற்பட்ட கைகலப்பு ஒரு சிறிய நிகழ்ச்சி என்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றாகும் இது ஒன்றும் தீவிரமான நிகழ்ச்சி இல்லை என்பதால் மத்திய சிறைக் கண்காணிப்பாளரின் தனி அறிக்கை சிறைத்துறைத் தலைவருக்கு அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை என்பது தமிழ்நாடு சிறை நடைமுறை நூல், தொகுதி-IIல் விதி 25-ல் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது மேலும் மேற்குறிப்பிட்ட நிகழ்வு ஜெயிலரின் (Report) புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிகழ்வு குறித்து துணை சிறைத்துறைத் தலைவர் (தலைமையிடம்) அவர்களிடம் 26.10.2000 அன்று மாலை 5.45 மணிக்கு தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

குற்றத்தாளில் குறிப்பிடப்பட்டுள்ள துணை சிறைத்துறைத் தலைவர், சென்னை அவர்களின் விசாரணை அறிக்கை மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்படாதது குற்றச்சாட்டிலிருந்து தன்னை காத்துக் கொள்ள அன்னாருக்கு வழங்கப்பட்டுள்ள வாய்ப்பினை மறுக்கப்பட்டதாக எடுதுக்கொள்ளப்பட வேண்டும் (State of Assam Vs Mahindra A 1970 SC 1255, 1259-60), எனவே விதிமுறைகளை பின்பற்றாமல் வழங்கப்பட்ட தண்டனை தள்ளுபடி செய்ய வேண்டியது அவசியமாகும்.

மேல்முறையீட்டாளர் தன் மேல்முறையீட்டில் ஏற்றுக்கொள்ளத்தக்க காரணங்கள் பல தெரிவிக்கப்பட்டுள்ளன. சிறைத்துறையில் பணியாற்றிய முதுநிலை அலுவலரை அற்பக் காரணங்களுக்காக தண்டிப்பது தவறான முன்னுதாரணமாக ஆகிவிடும். எனவே தேர்வாணையம் மேல்முறையீட்டை ஏற்றுக்கொண்டு வழங்கப்பட்ட தண்டனையை ரத்து செய்யலாம் என கருதுகிறது இது சரியான மற்றும் நியாயமான நீதி வழங்குவதாகும் என்பதால் அவ்வாறே அரசுக்கு ஆலோசனை வழங்கியது. ஆனால், அரசு, அரசாணை எண். 200, உள் (சிறை 1) துறை, நாள் 11.03.2002 -ல் குற்றத்தாளில் குறிப்பிடப்பட்ட துணை சிறைத்துறைத் தலைவரின் விசாரணை அறிக்கை குற்ற அலுவலருக்கு அளிக்காதது தவறு என்பதை ஏற்றுக்கொண்டு விசாரணை அறிக்கை அன்னாருக்கு வழங்கி மீண்டும் வழக்கை நடத்த முடிவெடுத்துள்ளது. எனவே வழங்கப்பட்ட 'கண்டனம்' என்ற தண்டனையை ரத்து செய்தும், தவறு ஏற்பட்ட நிலையிலிருந்து வழக்கை தொடரவும் 11.03.2002 நாளிட்ட அரசாணையில் ஆணை பிறப்பித்துள்ளது.

வழக்கு - 3

1996-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அரசு, ஊரக வளர்ச்சித் துறையில், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தில் பணியாற்றிய திருவாளர்கள் என்., நடராஜன், ஜி., ஆறுமுகம், சி. தேவேந்திரன், ஜி. இராமச்சந்திரன் மற்றும் எ. சீனுவாசமூர்த்தி என்பவர்களால் சமூகக் காடுகள் திட்ட செயலாக்கத்தில் ஏற்படுத்தப்பட்ட முறைகேடுகள் குறித்து, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவரால் தமிழ்நாடு குடிமுறைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17 (ஆ) வின்படி எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட ஆவணங்களை அனுப்பிவைத்து அவற்றின் மீது பிறப்பிக்கப்பட வேண்டிய

ஆணை குறித்து தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது. இவ்வழக்கின் விசாரணை அலுவலர் தனது விசாரணை அறிக்கையில் குற்ற அலுவலர்களின் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபணம் ஆனதாகக் குறிப்பிட்டு அதன் முடிவில் குற்ற அலுவலர்களுக்கு அவர்கள் அரசுக்கு ஏற்படுத்திய இழப்பினை ஈடுசெய்யும் வகையில் பணத்தை பிடித்தம் செய்யவும், மேலும் அவர்கள் செய்த குற்றத்திற்கு தகுந்த தண்டணையும் வழங்கலாம் என தனது அறிக்கையில் கூறியுள்ளார். இந்த நிலையில், இந்த வழக்கில் அரசு குற்ற அலுவலர்களுக்கு வழங்கவேண்டிய தண்டனை குறித்து தற்காலிக முடிவு எடுத்து அதன் மீதான தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது. இவ்வழக்கை ஆய்வு செய்த தேர்வாணையம் இந்த வழக்கில் விசாரணை அலுவலர் தண்டனை வழங்க வேண்டும் என அறிவுரை கூறி இருப்பது ஒழுங்கு நடவடிக்கைக்கான கையேடு பாகம் -II அத்தியாயம் III -ல் உள்ள பத்தி 9-ன்படி இவ்வழக்கினை வழுவுள்ளதாக்குகிறது எனத் தெரிவித்து, ~~எனவே~~ வழுவேற்பட்ட நிலையிலிருந்து புதிதாக வழக்கை தொடர்ந்து நடத்த அரசுக்கு ஆலோசனை அளித்தது. அரசு தனது ஆணை எண். 199 முதல் 203 முடிய ஊரக வளர்ச்சித்துறை நாள். 17.04.2002-ன் மூலம் குற்ற அலுவலருக்கு எதிராக ஏற்கனவே எடுத்த தற்காலிக முடிவினை உறுதி செய்ய முடிவெடுத்து அவ்வாறே தன்னிச்சையாக செயல்பட்டு தேர்வாணையக் கருத்திற்கு மாறுபட்டு குற்ற அலுவலருக்கு தண்டனை வழங்கி ஆணை பிறப்பித்துள்ளது.

<u>வழக்கு - 4</u>

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் பணிபுரிந்த முன்னாள் நூலகருக்கு ஊதிய உயர்வை திரண்ட பயனின்றி ஓராண்டு காலத்திற்கு நிறுத்தி வைத்து வழங்கப்பட்ட ஆணையை எதிர்த்து, அவர் அரசுக்கு அளித்த மேல்முறையீட்டின் மீது 1998-ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் தேர்வாணையத்தின் கருத்தினை அரசு கோரியிருந்தது.

தேர்வாணையம், மேற்கூறப்பட்ட வழக்கின் தன்மையை ஆராய்ந்து தேர்வாணையக் கருத்துக்களை அரசுக்கு தனது 15.03.99 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்தது.

"மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்கள், நிரூபணமான குற்றச்சாட்டுகளுக்கு தண்டனையாக குற்ற அலுவலரின் ஊதிய உயர்வை திரண்ட பயனின்றி ஓராண்டு காலத்திற்கு நிறுத்தி வைத்து ஆணையிட்டார். இவ்வாணை 27.01.98 அன்று பிறப்பிக்கபட்டுள்ளது. குற்ற அலுவலரின் ஊதிய உயர்வு, நாள் 01.10.98. அவரது ஓய்வு பெறும் நாள் 31.03.99. இதனால் அவருக்கு அளிக்கப்பட்ட தண்டனை முழுமையாக அமுல் படுத்த முடியாது அவ்வாறு அமுல்படுத்தினால் அவரது ஓய்வூதியம் பாதிக்கப்படும். ஆனால், மருத்துவக் கல்வி இயக்குநர் தனது ஆணையில் குற்ற அலுவலருக்கு வழங்கப்பட்ட தண்டனை அவரது ஓய்வூதியத்தை பாதிக்காது என்று தெரிவித்துள்ளார். இந்த மாதிரி வழக்குகளில், குற்றச்சாட்டுக்கள், விதி 17 (அ) விற்கு பதிலாக விதி 17 (ஆ)-வில் தொடரப்பட்டிருக்க வேண்டும். ஆனால் தற்போது விதி 17 (அ)-ல் குற்றச்சாட்டுகள் தொடரப்பட்டுள்ளதால், ஓய்வு பெறும் நிலையில் விதி 17 (ஆ) -க்கு மாற்றம் செய்ய இயலாது. மேலும் குற்றச்சாட்டுக்கள் தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்கு மற்றம் மேல்முறையீடு) விதி 17 (அ)-ன் கீழ் தொடரப்பட்டுள்ளதால் அதை ஓய்வூதிய விதிகளின் கீழ் தொடர இயலாது. குற்ற அலுவலர் 31.03.99-ல் ஓய்வு பெற உள்ளதாலும், மற்றும் அவரது ஊதிய உயர்வு நாள் 01.10.98 என்று உள்ளதாலும், அவரது ஊதிய உயர்வினை ஐந்து மாதங்களுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தி வைக்குமாறு தேர்வாணையம் தனது கருத்தாக அரசுக்கு தெரிவித்தது. மேலும், இத்தண்டனை அவரது விடுப்புக்காலம் நீங்கலாகவும், அவரது ஓய்வூதியத்ததை பாதிக்காத வகையிலும், ஏற்கனவே வழங்கப்பட்ட ஓராண்டு ஊதிய உயர்வு, நிறுத்த தண்டனையை செயல்படுத்த இயலாததாலும் வழங்கப்படுவதாக அரசுக்கு தேர்வாணையம் தெரிவித்தது."

பின்னர் அரசு தனது 27.03.2001 நாளிட்ட கடிதத்தில் பின்வரும் விபரங்களை தெரிவித்தது-

"அரசு இவ்வழக்கு தொடர்பாக மேல் முறையீட்டாளரின் பணிப்பதிவேட்டை சரிபார்த்த போது அவரது ஊதிய உயர்வு நாள் 01.10.98-ற்கு பதிலாக 01.04.98 என்று கண்டறியப்பட்டது."

இந்த ஊதிய உயர்வு நாள் மாறுபாட்டினால், தேர்வாணையத்தின் மறு கருத்தினை அரசு கோரியிருந்தது.

தேர்வாணையம் இவ்வழக்கு சம்பந்தமாக பதிவுருக்களை ஆராய்ந்து தனது 20.07.2001 நாளிட்ட கடிதத்தில் பின்வருமாறு கருத்து தெரிவித்தது:-

"மருத்துவக் கல்வி இயக்குநர், 27.01.98-ல் மேல்முறையீட்டாளரின் ஊதிய உயர்வினை ஓராண்டு காலத்திற்கு திரண்ட பயனின்றி நிறுத்தி வைத்து தண்டனை வழங்கியுள்ளார். மேல்முறையீட்டாளரின் ஊதிய உயர்வு நாள் ஏப்ரல் முதல் தேதி ஆகும்.. இறுதி ஆணையில் ஊதிய உயர்வு நிறுத்த தண்டனையானது மேல்முறையீட்டாளரின் ஓய்வூதியத்தை பாதிக்காது என உள்ளது. ஆனால் மேல்முறையீட்டாளரின் ஓய்வு பெறும் நாள் 31.03.1999 என்பதால் இத்தண்டனையானது அவரது ஓய்வூதியத்தை பாதிக்கும். தமிழ்நாடு குடிமுறைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 17 (அ)-ன் கீழ் வழங்கப்பட்ட தண்டனை ஓய்வூதியத்தை பாதிக்கும் வகையில் இருந்தால் தண்டனை வழங்குவதற்கு முன்னால் தமிழ்நாடு குடிமுறைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதி17 (ஆ)-ன் கீழ் நடைமுறைகள் தொடரப்பட வேண்டும்., இந்த நடைமுறை இவ்வழக்கில் பின்பற்றப்படவில்லை ஏனவே, மருத்துவக் கல்வி இயக்குநர் வழங்கிய இறுதி ஆணை குறைபாடான ஒன்றாகும். தமிழ்நாடு குடிமுறைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 17 (அ)-ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால் இது ஓய்வூதிய விதிகளின் கீழ் தொடர முடியாது. மேலும் மேல்முறையீட்டாளர், ஏற்கனவே 31.03.1999-ல் ஓய்வு பெற்றுள்ளார். ஏனவே வழங்கப்பட்ட தண்டனையை ரத்து செய்து ஒழுங்கு நடவடிக்கையை கைவிடலாம் என தேர்வாணையம் ஆலோசனை வழங்கியது

அரசு தனது 25.07.2002 நாளிட்ட கடிதத்தில் இந்நேர்வின் தொடர்பான தேர்வாணையத்தின் கருத்தினை. பரிசீலனை செய்து, மேல்முறையீட்டாளர் மீதான இரு குறைபாடுகளும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது மேலும் தேர்வாணையத்தின் கருத்தினை ஏற்றுக் கொண்டால் மேல்முறையீட்டாளர் தண்டனையிலிருந்து தப்பிவிடுதல் போலாகும். ஆதலால் தேர்வாணையத்தின் கருத்திலிருந்து அரசு மாறுபட்டு, மேல்முறையீட்டாளரக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனையான திரண்ட பயனின்றி ஓராண்டு கால ஊதிய உயர்வு நிறுத்தத் தண்டனையை மாற்றி பதினோரு மாத காலத்திற்கு திரண்ட பயனின்றி ஊதிய உயர்வு நிறுத்தம் செய்து ஆணை வெளியிட்டுள்ளது மேலும் அது அவரது ஓய்வூதியத்தை பாதிக்காது எனவும் தெரிவித்துள்ளது. இதனை அரசாணை எண். (டி) 1168 சுகாதாரம் மற்றம் குடும்ப நலத்துறை நாள் 25.07.2002 மூலம் அரசு ஆணையிட்டுள்ளது.

<u>வழக்கு - 5</u>

1997-ம் ஆண்டு ஜூலை மாதத்தில், அரசு பொதுப்பணித்துறையில் பணியாற்றிய திருவாளர்கள் எஸ். செல்வராஜ், உதவி செயற்பொறியாளர், ஆர். வெங்கிடாசலம் மற்றும் எஸ். அருணாசலம், இளநிலை பொறியாளர்கள் என்பவர்களால் 1985-87ல் சாத்தனூர் முக்கிய கால்வாயில் பராமரிப்பு வேலை செய்ததில் முறைகேடுகள் செய்த வகையில் அரசுக்கு ஏற்பட்ட இழப்புத் தொகை ரூ.2,00,509.90 சம்பந்தமாக எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட ஆவணங்களை அனுப்பி வைத்து, இவ்வழக்கில் பிறப்பிக்க வேண்டிய ஆணை குறித்து தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது.

இவ்வழக்கை ஆய்வு செய்த தேர்வாணையம் ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயத்தின் கண்டுபிடிப்புகளை ஏற்று, குற்ற அலுவலர் திரு எஸ். செல்வராஜ், உதவி செயற்பொறியாளர், 31.03.92ல் ஓய்வு பெறும் தேதியில் ஓய்வு பெற அனுமதிக்கப்படாததால் அவரை ஓய்வு பெற அனுமதியளித்து, அவர் மீதான நிரூபணமான குற்றச்சாட்டுக்களுக்கு அவரது ஓய்வூதியத்திலிருந்து மாதம் ரூ.50/- வீதம் மூன்று ஆண்டுகளுக்குப் பிடித்தம் செய்யவும் அரசுக்கு ஏற்பட்ட மொத்த இழப்புத் தொகையில் 10% மட்டும் அதாவது ரூ 9,050/-ஐ அவரது ஓய்வூதிய பலன்களிலிருந்து பிடித்தம் செய்யலாம் என்றும் அரசுக்கு ஆலோசனை அளித்தது.

மேலும் திரு ஆர் வெங்கிடாசலம் மற்றும் திரு எஸ் அருணாசலம் இளநிலைப் பொறியாளர்கள் என்பவர்களுக்கு இவர்கள் மீதான மற்ற துறை நடவடிக்கைகள் காரணமாக துறை நடவடிக்கை எண்.11/88ல் இவர்களுடைய ஊதிய உயர்வை ஓராண்டிற்குத் திரண்ட பயனுடன் நிறுத்தி வைத்து அரசால் ஏற்கனவே ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதால், தேர்வாணையம் இந்தவழக்கின் இழப்புத் தொகையில் 10 சதவிகிதமான முறையே ரூ.7,200/- மற்றும் ரூ 1700/-ஐ இவர்களது ஊதியத்திலிருந்து தவணைமுறையில் பிடிக்கலாம் என்றும் ஆலோசனையை அரசுக்கு அளித்தது

ஆனால் அரசு அக்டோபர் 2000 மாதத்தில் அரசாணை எண்கள் (3டி) 87, 89 மற்றும் 90 பொதுப்பணித்துறை, நாள் 13.10.2000ன் மூலம் தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு குற்ற அலுவலர்களை பணி நீக்கம் செய்து ஆணை பிறப்பித்துள்ளது.

வழக்கு -6

1997-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அரசு உள் (சிறை-2) துறையில் வேலூர் மத்திய சிறையில் இரண்டாம் நிலைச் காவலர்களாகப் பணியாற்றிய திருவாளர்கள் டி. வினாயகமூர்த்தி, கே மணி, எஸ். மகேந்திரன், எம் ஜெயச்சந்திரபாபு மற்றும் வி பாலகிருஷ்ணன் என்பவர்கள் மேற்படி சிறையில் 8 ஆயுள் தண்டனைக் கைதிகள் தப்பிச் சென்றதற்கு காரணமானார்கள் என்ற குற்றச்சாட்டின் காரணமாக பணியறவு என்னும் தண்டனையை (Dismissed from Service) வழங்கி, சிறைத்துறைத் தலைவரால் பிறப்பிக்கப்பட்ட ஆணையை எதிர்த்து அனுப்பி வைக்கப்பட்ட மேல்முறையீடுகள் சம்பந்தப்பட்ட ஆவணங்களை அனுப்பி வைத்து அம்மேல்முறையீடுகள் மீது பிறப்பிக்க வேண்டிய ஆணை குறித்து தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது.

இவ்வழக்கினை ஆய்வு செய்த தேர்வாணையம், இந்த வழக்கு சம்பந்தப்பட்ட சூழ்நிலைகளையும், மேல்முறையீட்டாளர்கள் பணிமூப்பின் காரணமாக ஓய்வு பெறுவதற்குமுன் உள்ள பணிக்காலங்களையும் கருத்தில் கொண்டு, கருணை நோக்குடன் அவர்களுக்கு வழங்கப்பட்ட பணியறவு என்னும் தண்டனையை மாற்றி, அவர்களது ஊதிய உயர்வை 5 ஆண்டுகளுக்கு திரண்ட பயனுடன் நிறுத்தம் செய்து ஆணையிடலாம் என்று அரசுக்கு ஆலோசனை அளித்தது.

ஆனால் அரசு தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு (deviated from the Commission's advice) மேல்முறையீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட பணியறவு என்னும் தண்டனையை (Dismissed from Service) மாற்றி பணி நீக்கம் என்னும் தண்டனையை வழங்கி (Removed from Service) அரசாணைகள் எண்கள். 1125 முதல் 1129 உள் (சிறை-2) துறை, நாள் 18.10.2000-ன் மூலம் ஆணைகள் பிறப்பித்துள்ளது.

வழக்கு-7

மதுரை மருத்துவக்கல்லூரியில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட முன்னாள் சிற்றூழியராக (Luscar) பணிபுரிந்த திரு. இராஜா என்பவருக்கு வழங்கப்பட்ட பணிநீக்க தண்டனை ஆணையை எதிர்த்து, அவர் அரசுக்கு அளித்த மனு மீது தேர்வாணையத்தின் கருத்தினை 1999-ம் ஆண்டு டிசம்பர் மாதம் அரசு கோரியிருந்தது.

மேற்கூறப்பட்ட வழக்கின் தன்மையை ஆராய்ந்து, மனுதாரரே தன்மீது சுமத்தப்பட்ட குற்றமான, போலியான கல்விச் சான்றிதழ் சமர்ப்பித்ததை ஒப்புக்கொண்டுள்ளபடியாலும், அவர் செய்த குற்றத்திற்கு சமாதானமாக வலுவான காரணங்கள் ஏதும் கூறாத காரணத்தாலும், அன்னாரின் மனுவைத் தள்ளுபடி செய்ய, தேர்வாணையம் அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

இந்நேர்வினை ஆராய்ந்த அரசு, தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு மனுதாரருக்கு வழங்கப்பட்ட பணிநீக்க தண்டனையை மாற்றி அன்னாரின் ஊதிய உயர்வை திரண்ட பயனுடன் இரண்டு ஆண்டுகளுக்கு நிறுத்தி வைக்க முடிவெடுத்து, அரசு, அரசாணை (டி) எண். 1407, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 05.09.2002 மூலம் ஆணையிட்டுள்ளது.

வழக்கு - 8

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரின் முன்னாள் நேர்முக உதவியாளராக (மதிய உணவு திட்டம்) பணிபுரிந்தவருக்கு ஊதிய உயர்வை திரண்ட பயனின்றி ஆறுமாத காலத்திற்கு நிறுத்திவைத்து வழங்கப்பட்ட ஆணையை எதிர்த்து, அவர் அரசுக்கு அளித்த மேல்முறையீட்டின் மீது தேர்வாணையத்தின் கருத்தினை 1990-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் அரசு கோரியிருந்தது.

மேற்கூறப்பட்ட வழக்கின் தன்மையை ஆராய்ந்து. மேல்முறையீட்டாளரின் ஓய்வு பெறும் நாள் 31.08.90 என்பதால், அவருக்கு 14.02.90-ல் வழங்கப்பட்ட ஆறுமாத கால திரண்ட பயனின்றி ஊதிய உயர்வு நிறுத்த தண்டனையை செயல்படுத்தும் போது அது அன்னாரின் ஓய்வூதியத்தைத் தானகவே பாதிக்கிறது எனவும், தமிழ்நாடு குடிமுறைப்பணிகள் (வகைப்பாடு, மற்றும் கட்டுப்பாடு, மற்றும் மேல்முறையீடு) விதி17 (அ)-வில் வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி ஓய்வூதியத்தை பாதிக்கும் தண்டனை வழங்கப்பட்டால் அதற்கு தமிழ்நாடு குடிமுறைப்பணிகள் (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதி 17 (ஆ)வின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டுமெனவும், ஆனால் இவ்வழக்கில் விதி 17(அ) வின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும், இது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையை வழுவுள்ளதாக்குகிறது என்பதால் தண்டனை ஆணையை ரத்து செய்துவிட்டு வழுவேற்பட்ட இடத்திலிருந்து புதிய நடவடிக்கையை தொடரும்படி, தேர்வாணையம் அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

அரசு மீண்டும் 1992-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் இவ்வழக்கின் மீது தேர்வாணையத்தின் திருத்திய கருத்தினை கோரியது. தேர்வாணையம்., ஏற்கனவே தெரிவித்த கருத்தான தண்டனை ஆணையை ரத்து செய்துவிட்டு வழு ஏற்பட்ட இடத்திலிருந்து புதிய நடவடிக்கையை தொடரும்படி மீண்டும் வலியுறுத்தி அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

அரசு, இந்நேர்வில் தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு, மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்ட தண்டனையை ரத்து செய்வதுடன் அவர்மீதான ஒழுங்கு நடவடிக்கையை கைவிடலாம் என முடிவெடுத்து அரசு அரசாணை (டி) எண். 394, ஊரக வளர்ச்சி (இ1) துறை, நாள். 25.07.2002 மூலம் ஆணையிட்டுள்ளது

<u>வழக்கு -9</u>

திரு எஸ். செல்லப்பன், வணிகவரி அலுவலராக திருவொற்றியூர் வட்டத்தில் பணியாற்றியபோது தன் பாதுகாப்பிலுள்ள விற்பனை படிவங்களை சரிவர பாதுகாக்காமல், ஏராளமான படிவங்கள் இழப்பு ஏற்படுவதற்கு காரணமாக இருந்தமையால், அன்னாரது ஊதிய உயர்வை திரண்ட பயனுடன் இரண்டு ஆண்டுகளுக்கு நிறுத்தி வைத்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது இவ்வாணையினை எதிர்த்து அரசுக்கு அளித்த மறு ஆய்வு மனு மீது அரசு 1998-ம் ஆண்டில் ஜூலை மாதம் தேர்வாணையத்தின் கருத்தினை கோரியது

தேர்வாணையம் மேற்கண்ட வழக்கின் தன்மையை ஆராய்ந்து மனுதாரருக்கு வழங்கப்பட்ட தண்டனை மிகையானது எனக் கருதி அவரது ஊதிய உயர்வு நிறுத்தத்தை ஓராண்டு காலத்திற்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்ய அரசுக்கு ஜூலை 2000-ல் ஆலோசனை வழங்கியது.

ஆனால் அரசாணை எண். (2டி) 80, வணிகவரி துறை, நாள் 07.08.2002-ல் தேர்வாணையத்தின் ஆலோசனைக்கு மாறாக மனுதாரரின் மறுஆய்வு மனுவை நிராகரித்து ஏற்கனவே வழங்கப்பட்ட ஊதிய உயர்வு, 2 ஆண்டுகள் திரண்ட பயனுடன் நிறுத்திய தண்டனையை உறுதி செய்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது

அரசு கீழ்க்கண்ட காரணங்களை அடிப்படையாகக் கொண்டு தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறுபட்டு ஆணை வெளியிட்டுள்ளதாகத் தனது கடிதம் மூலம் தெரிவித்துள்ளது

மறு ஆய்வு மனுதாரரின் கவனக் குறைவு காரணமாக ஏராளமான படிவங்கள் தொலைந்து போனதன் மூலமாக அரசுக்கு பண இழப்பு ஏற்படக் காரணமாக இருந்துள்ளார் என விசாரணை அலுவலர் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும் மறு ஆய்வு மனுதாரரின் இச்செயலுக்கு கடுமையான தண்டனை சரியானது எனக் கூறி அவரது மனுவை தள்ளுபடி செய்து, ஊதிய உயர்வு நிறுத்த தண்டனையை உறுதி செய்து ஆணை பிறப்பித்துள்ளது

தேர்வாணையம் வழக்கின் தன்மையையும், சூழ்நிலையையும் கருத்திற்கொண்டு ஏற்கனவே வழங்கப்பட்ட தண்டனையான திரண்ட பயனுடன் இரண்டு வருட ஊதிய உயர்வு நிறுத்த தண்டனையை அதிகம் என கருதி அத்தண்டனையை திரண்ட பயனின்றி ஒரு வருட கால ஊதிய உயர்வு நிறுத்த தண்டனையாக அளிக்கலாமென்று அரசுக்கு ஆலோசனை வழங்கியது ஆனால் அரசு தேர்வாணையத்தின் கருத்தினை ஏற்காது மாறுபட்டு அரசாணை வழங்கியுள்ளது.

<u>வழக்கு - 10</u>

திரு. த விஸ்வநாதன் (மேல்முறையீட்டாளர்) நாகப்பட்டினம், தொழில் பயிற்சி நிலையத்தில், முதல்வராக பணியாற்றியபோது அந்நிலையத்தில் பணியாற்றிய பயிற்சி அலுவலர், வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் முன் அனுமதியின்றி குடியிருந்து வந்த காலத்திற்கு உரிய அடக்க வாடகையை பிடித்தம் செய்யத் தவறியதால் மேல்முறையீட்டாளர் மீது இயக்குநர் அவர்கள் ஆறுமாத காலத்திற்கு ஊதிய உயர்வினை திரண்ட பயனின்றி நிறுத்தி வைத்து ஆணை பிறப்பித்தார் இவ்வாணையினை எதிர்த்து அரசுக்கு அளித்துள்ள மேல்முறையீட்டு மனு மீது அரசு தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது

தேர்வாணையம் மேற்கண்ட வழக்கின் தன்மையை ஆராய்ந்து மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்ட தண்டனை, அமல்படுத்த இயலாத ஒன்றாக அமைந்ததால் ஏற்கனவே பிறப்பித்த இறுதி ஆணையை ரத்து செய்து விட்டு, வழக்கில் வழு ஏற்பட்ட இடத்திலிருந்து தொடர்ந்து நடத்தி முடிக்குமாறு ஆலோசனை வழங்கியது.

ஆனால், அரசு தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு, மேல்முறையீட்டாளருக்கு இயக்குநரால் வழங்கப்பட்ட ஊதிய உயர்வினை 6 மாத காலத்திற்கு திரண்ட பயனின்றி நிறுத்த தண்டனையைக் குறைத்து 4 மாத காலத்திற்கு திரண்ட பயனின்றி நிறுத்தி வைக்க முடிவு செய்து, அரசாணை (நிலை) எண். 80, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (ப்பி 1) துறை, நாள் 24.09.2002-ல் ஆணைவெளியிட்டுள்ளது.

<u>வழக்கு -11</u>

திரு. அ. ராமநாதன், மருத்துவ அலுவலர், புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணியாற்றிய போது 02.04.97 அன்று அந்நிலையத்தில் இணை இயக்குநர் திடீர் ஆய்வு மேற்கொண்டபோது மேல்முறையீட்டாளர் அன்று முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் இருந்தமைக்காக அன்னாரின் ஊதிய உயர்வை திரண்ட பயனின்றி ஓராண்டு நிறுத்தி வைத்து இயக்குநர் அவர்கள் தண்டனை வழங்கியுள்ளார் இவ்வாணையினை எதிர்த்து மேல்முறையீட்டாளர் அரசுக்கு அளித்த மேல்முறையீட்டின் மீது அரசு தேர்வாணையத்தின் கருத்தினை கோரியது. இவ்வழக்கினை நன்கு ஆராய்ந்த தேர்வாணையம், மேல்முறையீட்டாளருக்கு அளித்த தண்டனையை உறுதி செய்யும்படி அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

அரசு இம்மேல்முறையீட்டின் மீது மீண்டும் திருத்திய கருத்தினை கோரியது இவ்வழக்கினை மீண்டும் ஆய்வு செய்த தேர்வாணையம் அரசுக்கு ஏற்கனவே அளித்த கருத்தையே மீண்டும் வழங்கியது

அரசு, தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு ஆணை வெளியிட்டுள்ளது (அரசாணை (டி) எண் 1556/ சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, நாள். 17.10 2002). மேல்முறையீட்டாளருக்கு அளித்துள்ள தண்டனையான ஊதிய உயர்வு ஓராண்டு காலம் திரண்ட பயனின்றி நிறுத்தி வைத்த தண்டனையை குறைத்து 'கண்டனம்' என்னும் தண்டனையை வழங்கியுள்ளது.

அரசு கீழ்க்கண்ட காரணங்களால் தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டுள்ளதாக அரசாணையில் தெரிவித்துள்ளது.:-

“மேல்முறையீட்டாளர் திரு. அ. ராமநாதன், 02.04.97 அன்று ஒரு நாள் மட்டுமே பணியில் இல்லாததால் அவருக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனை குற்றத்தின் தன்மைக்கு ஏற்ப தகுந்ததாக இல்லை என்று தோன்றுகிறது

தேர்வாணையம் வழக்கின் தன்மையையும், சூழ்நிலையும் கருத்திற்கொண்டு மேல்முறையீட்டாளருக்கு ஏற்கனவே வழங்கியுள்ள தண்டனையை உறுதி செய்து அரசுக்கு ஆலோசனை வழங்கியது ஆனால் அரசு தேர்வாணையத்தின் கருத்தினை ஏற்காது மாறுபட்டு அரசாணை வழங்கியுள்ளது.

<u>வழக்கு -12</u>

அரசு, தனது 16.11.2000 நாளிட்ட கடிதத்தில் திரு முருகேசன் இரண்டாம் நிலைக் காவலர், நிலக்கோட்டை கிளைச் சிறையில் பணிபுரிந்தபோது, அவர் பொறுப்பில் ஒப்படைத்திருந்த துப்பாக்கி குண்டுகளில், ஒரு குண்டினை தன்னிச்சையாக துப்பாக்கியில் குண்டு நிரப்பி, மேல் நோக்கி சுட்டது சம்பந்தமாக, அன்னாருக்கு வழங்கப்பட்ட பணியறவு என்னும் தண்டனையை எதிர்த்து சமர்ப்பித்த மனுவை தேர்வாணையத்திற்கு அனுப்பி வைத்து தேர்வாணையத்தின் கருத்தினை கோரியது.

இவ்வழக்கை ஆராய்ந்த தேர்வாணையம் தனது 29.10.01 நாளிட்டக் கடிதத்தில் கீழ்க்கண்டவாறு ஆலோசனை வழங்கியது

"மனுதாரர் தனது தற்போதைய மனுவிலும், சீராய்வு மனுவிலும் எந்தவிதமான புதிய காரணங்களை, தான் செய்த தவறுக்கு சமாதானமாகக் கூறவில்லை ஏற்கனவே தனது விளக்கத்தில் கூறிய காரணங்களையே கூறியுள்ளார். இவர் தான் செய்த தவறுக்கு கூறிய விளக்கமும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை. இவ்வாறு சிறைத் துறையில் காவல் புரியும் பணியாளர் தன் சுய நினைவின்றி செயல்பட்டால் சிறைத் துறைக்கும் மற்றும் அங்கு பணிபுரிபவர்களுக்கும் ஏற்புடையது ஆகாது ஆகவே, இவரது மனுவில், எந்தவிதமான புதிய சாராம்சம் ஏதும் இல்லை என்ற காரணத்தால் தள்ளுபடி செய்யலாம்.".

ஆனால் அரசு, தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறுபட்டு அரசாணை நிலை எண். 1158 உள் (சிறை-2)துறை, நாள் 02.12.02 ஆணை பிறப்பித்துள்ளது. அதற்கு கீழ்க்கண்ட காரணங்களைத் தெரிவித்துள்ளது

"மனுவில் உள்ள எல்லாவிவரங்களும் கருத்தில் கொள்ளப்பட்டது. இந்நேர்வில் எந்தவிதமான சேதமும் ஏற்படவில்லை மனுதாரர் இச்செயலை வேண்டுமென்றே செய்யவில்லை கட்டுப்பாட்டை மீறிதான் இச்செயல் நடந்தது என்ற குற்றம் நிரூபணமாகிறது. நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டிற்கு மனுதாரருக்கு கட்டாய ஓய்வு என்ற தண்டனை வழங்குவது நியாயமாக அமையும் என்று அரசு முடிவு செய்தது. எனவே, மனுதாரரின் மீதான நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டிற்கு மனுதாரருக்கு அளிக்கப்பட்ட பணியறவு தண்டனையை கட்டாய ஓய்வு என்னும் தண்டனையாக மாற்றி வழங்க அரசு முடிவு செய்துள்ளது எனத் தெரிவித்து, அதன்படியே, தேர்வாணையத்தின் முடிவிலிருந்து மாறுபட்டு, திரு. எம். முருகேசன்., இரண்டாம் நிலைக் காவலருக்கு, மதுரை மத்தியசிறை கண்காணிப்பாளரால் வழங்கப்பட்ட பணியறவு என்னும் தண்டனையை கட்டாய ஓய்வு எனும் தண்டனையாக மாற்றி உத்தரவிட்டுள்ளது

தேர்வாணையம் வழக்கின் தன்மையையும், சூழ்நிலையையும் கருத்திற் கொண்டு மனுதாரரின் மனுவைத் தள்ளுபடி செய்யுமாறு அரசுக்கு ஆலோசனை வழங்கியது ஆனால் அரசு தேர்வாணையத்தின் கருத்தினை ஏற்காது மாறுபட்டு அரசாணை பிறப்பித்துள்ளது.

## ஆ . தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்படாமை:

அறிக்கைக்குரிய ஆண்டில் அரசு தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்காமல் 5 வழக்குகளில் செயல்பட்டுள்ளது. இதன் விவரம் பின்வருமாறு :-

<u>வழக்கு -1</u>

மாவட்டப் பதிவாளர் பதவியில் மாற்றுப்பணி நியமனம் மூலம் நியமிக்கப்படுவதற்கு நிர்வாகப் பிரிவில் பணிபுரிந்திருக்க வேண்டும் என்கிற தகுதியை நீக்கி தமிழ்நாடு பதிவுப் பணி சிறப்பு விதிகளுக்குரிய திருத்தம் 18.09.2000 முதல் முன்மேவு பலன் அளிக்கப்பட்டு அரசாணை எண். 148, வணிகவரி (எச்.2) துறை, நாள் 19.09.2000-ல் தேர்வாணையத்தை கலந்தாலோசிக்காமல் வெளியிடப்பட்டது. மேற்படி தகுதி, தேர்வாணையத்தை கலந்தாலோசித்து தமிழ்நாடு பதிவுப்பணி சிறப்பு விதிகளில் ஒரு திருத்தத்தின் மூலம் அரசாணை எண் 276, வணிகவரி மற்றும் சமய அறக்கட்டளைத் துறை, நாள் 06.08.96-ல் வெளியிடப்பட்ட ஆணையின் வாயிலாக சேர்க்கப்பட்டது மாவட்டப் பதிவாளர் பதவி தேர்வாணையத்தின் உள்ளீட்டெல்லைக்குள் உள்ளது. தேர்வாணையத்தின் உள்ளீட்டெல்லைக்குள் இருக்கும் மாவட்டப் பதிவாளர் பதவிக்கு மாற்றுப் பணி மூலம் நியமிக்கப்படுவதற்கான நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட மேற்படி தகுதியை நீக்கி திருத்தம் வெளியிட்ட போது தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்பட்டிருக்க வேண்டும் மேற்படி தகுதியை நீக்குவதற்கு முன்னர்

தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்படவில்லை. அரசு பொதுத் (பணியாளர் -எம்) துறை அலுவல் சாரா குறிப்பு எண் 4020/54-2, நாள் 11.09.54 மற்றும் அரசு பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (பணியாளர் -எம்) துறை கடித எண். 63278/89-3, நாள் 25.09.89-ல் வெளியிடப்பட்டுள்ள அறிவுரைகளின்படி நியமன முறைகளை பாதிக்கக்கூடிய முடிவுகளை எடுக்கும்முன்னரோ அல்லது நியமனங்களை மேற்கொள்வதற்கு பின்பற்ற வேண்டிய கொள்கை முடிவு எடுக்கும் முன்னரோ தேர்வாணையத்தை கலந்தாலோசிக்க வேண்டுமேயன்றி, விதிகளை உருவாக்கும் பொழுதோ/விதித்திருத்தங்கள் வெளியிடும் பொழுதோ கலந்தாலோசித்தல் போதுமானதன்று எனவே, அரசாணை எண் 148 வணிகவரித் (எச்.2) துறை, நாள் 19.09.2000-ல் மேற்படி திருத்தம் வெளியிடப்படும் முன்னர் தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்படாததற்கான காரணத்தை தெரிவிக்குமாறு அரசு கோரப்பட்டது. அரசு இதற்கு மறுமொழியாக, நிகழ்ந்து விட்டது உள்நோக்கமற்ற தவறு எனவும் அரசாணை எண்.148, வணிகவரித்துறை, நாள். 19.09.2000-ல் திருத்தம் வெளியிடப்பட்ட போது தவறுதலாக தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்படவில்லையெனவும், இத்தகைய தவறுகள் எதிர்காலத்தில் தொடராது எனவும் தெரிவித்துள்ளது. அரசு பொதுத் (பணிகள்) துறை அலுவல் சாரா குறிப்பு எண். 4020/54-2, நாள் 11.09.54 மற்றும் அரசு பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (பணியாளர் -எம்) துறை கடித எண் 63278/89-3, நாள் 25.09.89-ல் அரசு வெளியிட்டுள்ள அறிவுரைகளை அரசே பின்பற்றவில்லை. மேற்படி சூழ்நிலையில், தேர்வாணையம் கலந்தாலோசிக்கபடாத இவ்விடுபாட்டினை தன்னுடைய ஆண்டறிக்கையில் குறிப்பிட தேர்வாணையம் முடிவு செய்துள்ளது. எனினும் இத்தகைய விடுபாடு எதிர்காலத்தில் தொடராது என தேர்வாணையம் நம்புகிறது.

வழக்கு -2

தமிழ்நாடு பொதுப்பணியில் அடங்கியுள்ள சமூக நலத்துறை மற்றும் சத்துணவுத் துறையில் உள்ள தற்காலிகப் பதவிகளான உதவி இயக்குநர் மற்றும் குழந்தை நலத்திட்ட அலுவலர் பதவிகளுக்கான தற்காலிக விதிகளுக்கு திருத்தம் வெளியிட அரசு தீர்மானித்து 1998-ம் ஆண்டு ஜுன் மாதம் வரைவு விதி திருத்தம் அடங்கிய கருத்துரு ஒன்று தேர்வாணையத்தின் கருத்துக்களுக்காக அனுப்பி வைக்கப்பட்டது. வரைவு கருத்துருவை பரிசீலனை செய்ததில் ஏற்பட்ட சில சந்தேகங்களை தெளிவுபடுத்தும் பொருட்டு தற்காலிக விதிகளுக்கான திருத்தியமைக்கப்பட்ட வரைவு திருத்தங்களை அனுப்பி வைக்குமாறு அரசிடம் கோரப்பட்டது. அவ்வாறே அரசும் வரைவு திருத்த கருத்துருவை அனுப்பியுள்ளது. இத்தருணத்தில் மாவட்ட செய்தி அறிவிப்பு அலுவலர் பதவிக்கு பதவி உயர்வு கிடைக்க வாய்ப்பு இல்லாததாலும், அப்பதவிக்குண்டான பொறுப்புகளை உணர்ந்தும் அரசு மாவட்ட திட்ட ஊட்டச்சத்து அலுவலர் பதவியில் ஏற்படும் காலியிடங்களில் மாவட்ட செய்தி அறிவிப்பாளர் பதவிக்கு பணி மூப்பின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யும் பொருட்டு செயலாணை வெளியிடப்பட்டது. அரசாணை. எண். 82, சமூக நலத்துறை மற்றும் சத்துணவுத் திட்டம் நாள் 05.06.02ல் அரசால் வெளியிடப்பட்டது. எத்தகைய சூழ்நிலையில் மேற்படி செயல் ஆணை தேர்வாணையத்தை கலந்தாலோசிக்காமல் அரசால் வெளியிடப்பட்டுள்ளது என தெரிவிக்குமாறு அரசிடம் கோரப்பட்டது. அதற்கு மறுமொழியாக கீழ்க்கண்டவாறு அரசு தெரிவித்துள்ளது:-

"உலக வங்கித் துணையுடன் இயங்கும் இத்துறைக்கு மாவட்ட சத்துணவு திட்ட அலுவலர் பதவி உடனடியாக நிரப்பப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டதாலும், மேலும் அரசாணை எண். 1251, சமூக நலத்துறை, நாள் 24.07.87-ன்படி தற்காலிக விதிகள் வெளியிடுவதற்கு தாமதம் ஏற்படுமென்ற காரணத்தாலும் மாவட்ட செய்தி அறிவிப்பு அலுவலர் பதவிக்கு பதவி உயர்வு கிடைக்க வாய்ப்பு இல்லாததாலும், அப்பதவிக்குண்டான பொறுப்புகளை உணர்ந்து 30 விழுக்காடு, மாவட்ட நலத்திட்ட அலுவலர் பதவியை மாவட்ட செய்தி அறிவிப்பாளர் பதவியில் அவர்கள் முந்தைய தமிழ்நாடு சத்துணவுத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்துவதற்கு ஆற்றிய சேவையை கருதியும் பணி மூப்பின்

அடிப்படையில் ஒதுக்கீடு செய்யும் பொருட்டு தற்காலிக விதிகளுக்கு திருத்தம் வெளியிடுவதை நிலுவையில் வைத்து மேற்குறிப்பிட்ட அரசாணை வெளியிடப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்தது எனினும் மாவட்ட செய்தி அறிவுப்பு அலுவலர் பதவிகளை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும், மேலும் அரசாணை செயல்படுத்தப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளது".

அரசின் அலுவல் சாரா எண். 4020/54-2, பொது (பணிகள்) துறை, நாள் 11.09.54 மற்றும் அரசுக் கடித எண் 63278/89-3, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை (பணி-எம்), நாள் 25.09.89 ஆகியவற்றில் வெளியிடப்பட்டுள்ள அறிவுரைகளுக்கிணங்க தேர்வாணையத்தின் உள்ளீட்டெல்லைக்குள் இருக்கும் பதவிகளுக்குரிய நியமன முறைகள் பாதிக்கக்கூடிய முடிவுகளை அல்லது நியமனங்கள் செய்வதற்கான கொள்கை முடிவுகளை எடுக்கும் முன்னரே தேர்வாணையத்தை கலந்தாலோசிக்க வேண்டுமேயன்றி, விதிகள் உருவாக்கப்படும் பொழுதோ அல்லது திருத்தங்கள் வெளியிடும் பொழுதோ தேர்வாணையத்தை கலந்தாலோசித்தல் போதுமானதன்று, எனவே தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்படாத இவ்விடுபாட்டினை தேர்வாணையம் தனது ஆண்டறிக்கையில் குறிப்பிட முடிவு செய்துள்ளது. இவ்வாறு தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்பட வேண்டியது குறித்து அரசின் அலுவல் சாரா குறிப்புகள் மற்றும் அரசுக் கடிதத்தில் வெளியிடப்பட்டுள்ள நெறிமுறைகள் அரசால் பின்பற்றப்படவில்லை.

<u>வழக்கு-3</u>

அரசாணை எண். 144, உள் துறை (நீதிமன்றங்கள் (1.அ) நாள் 20.02.2002-ல் தமிழ்நாடு நீதிப்பணிக்கான விதித் திருத்தம் வெளியிடப்பட்டது. மேற்படிபணி மாநிலப் பணியானதால் அது தானாகவே தேர்வாணையத்தின் உள்ளீட்டெல்லைக்குள் வந்து விடுகிறது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள விதித்திருத்தம் வெளியிடும் முன்னர் தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்கப்பட்டிருக்க வேண்டும் ஆனால் அவ்வாறு தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்கப்படவில்லை. அரசின் அலுவல் சாரா குறிப்பு எண். 4020/54-2, பொதுத் (பணிகள்) துறை, நாள்.11.09.54 மற்றும் அரசுக் கடித எண் 63278/89-3, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (பணி-எம்) துறை, நாள் 25.09.89-இல் வெளியிடப்பட்டுள்ள நெறி முறைகளின் படி நியமன முறை அல்லது நியமன முறைகளைப் பாதிக்கக் கூடிய கொள்கை முடிவுகளை எடுக்கும் முன்னர் தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்க வேண்டுமேயன்றி விதிகளை உருவாக்கும் பொழுதோ அல்லது விதித்திருத்தங்களை வெளியிடும் பொழுதோ தேர்வாணையத்தைக் கலந்தாலோசித்தல் போதுமானதன்று. எனவே, எந்தச் சூழ்நிலையில் தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்கப்படவில்லை என்பதை தெரிவிக்குமாறு அரசு கோரப்பட்டது அதற்கு அரசு அரசாணை எண் 707, உள் துறை, நாள் 17.05.95 இல் வெளியிடுவதற்காக தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்கப்பட்ட போது தேர்வாணையம் குறிப்பு ஏதுமில்லை எனத் தெரிவித்ததால் தற்போது அரசாணை எண் 144, உள் துறை 20.02.2002 இல் வெளியிடப்பட்டுள்ள விதித் திருத்தம் இயல்பான ஒன்றானதால் தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்கப்படவில்லை என தெரிவித்துள்ளது அரசாணை எண் 144, உள் துறை, நாள் 17.05.95ல் காணும் விதித்திருத்தம் வெளியிடப்படுவதற்கு முன்னர் தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்படவில்லை. இவ்வாறு, அரசின் அலுவல் சாரா குறிப்பு எண். 4020/54-2 (பொதுத் (பணிகள்) துறை, நாள் 11.09.54 மற்றும் அரசுக் கடித எண் 63278/89-3. பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (பணி-எம்) துறை, நாள் 25.09.89 ஆகியவற்றில் அரசால் வெளியிடப்பட்டுள்ள நெறிமுறைகள், அரசால் பின்பற்றப்படவில்லை.

வழக்கு-4

அரசாணை எண். 212, தொழில் மற்றும் வேலைவாய்ப்பு, நாள் 14.11.95-ல் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் உள்ள துணை இயக்குநர் (பயிற்சி) (நிர்வாகம்) பதவிக்கான தற்காலிக விதிகள் தேர்வாணையத்தை கலந்தாலோசிக்காமல் அரசால் வெளியிடப்பட்டுள்ளது. இது பற்றி அரசிடம் விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டது அவ்வாறு விசாரித்ததில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள துணை இயக்குநர் பதவி தேர்வாணையத்தின் உள்ளீட்டெல்லையில் இருந்து நீக்கப்பட்ட பதவி என்ற காரணத்தால் தற்காலிக விதிகள் வெளியிடுவது குறித்து தேர்வாணையத்துடன் கலந்தாலோசிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாநிலப் பணிகளில் அடங்கியுள்ள பதவிகள் அனைத்தும், தனி அரசாணைகள் மூலம் தேர்வாணையத்தின் உள்ளீடெல்லையிலிருந்து நீக்கப்பட்டாலன்றி, இயல்பாகவே தேர்வாணையத்தின் உள்ளீட்டெல்லைக்குள் வந்துவிடுகின்றன என்று அரசுக்கு தெரிவிக்கப்பட்டு, அத்தகைய . அரசாணை ஏதேனும் இப்பதவியைப் பொறுத்தவரை வெளியிடப்பட்டுள்ளதா என்றும், அவ்வாறு வெளியிடப்பட்டிருந்தால், அதன் நகல் ஒன்றினை அனுப்பி வைக்கும்படி அரசிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. நிகழ்ந்துவிட்ட விடுபாட்டை சரிசெய்யும் முகமாக, அரசாணை எண். 122, தொழில் மற்றும் வேலைவாய்ப்பு, நாள் 06.10.98-ல் மேற்குறிப்பிட்ட பதவியை தேர்வாணைய உள்ளீட்டெல்லையில் இருந்து நீக்கம் செய்து அரசு ஆணை வெளியிட்டது. அவ்வரசாணை முன்மேவுப்பயன் விளைவு அளிக்கும் வகையில் 25.04.95 முதல் அதாவது மேற்படி பதவிக்கான தனி விதிகள் நடைமுறைக்கு வந்த தேதியிலிருந்து அமுலுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டது அதன் நகல் ஒன்றையும் தேர்வாணையத்திற்கு அனுப்பி வைத்தது.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் 320(3) மற்றும் தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்பட வேண்டிய பொருள்கள் குறித்து அரசு வெளியிட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகள் இவற்றின்பால் அரசின் கவனத்தை ஈர்த்து எத்தகைய காரணங்களால் தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்படவில்லை என்பதை தெரிவிக்கும்படி அரசு கேட்டுக் கொள்ளப்பட்டது. அதற்கு அரசு இனிவரும் காலங்களில் இது போன்றதொரு நிகழ்வு நேராவண்ணம் பார்த்துக்கொள்வதாக உறுதி அளித்ததோடு, நேர்ந்துவிட்ட விடுபாட்டையும் ஒப்புக் கொண்டது மேலும் தேர்வாணையத்தின் கருத்தினையும் கோரியுள்ளது. அரசு தெரிவித்த காரணங்களின் அடிப்படையில் தேர்வாணையம், அரசாணை எண். 122, தொழில் மற்றும் வேலைவாய்ப்பு, நாள் 06.10.98க்கு தனது பின்னேற்பு ஒப்புதலை (Post facto approval) அளிப்பது என்பதுடன், இத்தகு கலந்தாலோசிக்கப்படாமையை தனது ஆண்டறிக்கையில் குறிப்பிடுவது எனவும் முடிவெடுத்தது. அரசின் அலுவல் சாரா குறிப்பு எண். 4020/54-2, பொது (பணிகள்) துறை, நாள் 11.09.54 மற்றும் அரசுக் கடித எண். 63278/89-3, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (பணி.எம்) துறை, நாள் 25.09.89 ஆகியவற்றில் தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்பட வேண்டியது குறித்து வெளியிடப்பட்டுள்ள நெறிமுறைகள் அரசால் பின்பற்றப்படவில்லை..

வழக்கு - 5

அரசாணை நிலை எண். 36, எரிசக்தி (பி3) துறை, நாள் 27.04.01ல் அரசு. எரிசக்தி துறையில் தமிழ்நாடு மின் ஆய்வுப் பணியில் உள்ள தலைமைக் கணக்கர்/ஆட்சி அலுவலர் பதவிக்கு தமிழ்நாடு மின் ஆய்வுத் துறையில் கண்காணிப்பாளர் பதவியிலிருந்து பணிமாறுதல் மூலம் நியமனம் பெறுவதற்கு தற்போதுள்ள 5 வருட கால அனுபவம் தேவை என்பதற்குப் பதிலாக மூன்று வருட கால அனுபவமே போதும் என்று செயல்முறை ஆணை தேர்வாணையத்தை கலந்தாலோசிக்காமல் வெளியிடப்பட்டது. மின் ஆய்வுப் பணியில் உள்ள தலைமைக் கணக்கர்/ஆட்சி அலுவலர் பதவி மாநிலப் பணியில் உள்ளதால் அது தானாகவே தேர்வாணையத்தின் உள்ளீட்டெல்லைக்குள் வந்து விடுகிறது. அரசின் அலுவல் சாரா குறிப்பு எண். 4020/54-2, பொதுப் (பணிகள்)துறை, நாள் 11.09.54, அரசுக் கடித எண். 63278/89-3, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (பணி-எம்) துறை, நாள் 25.09.89 மற்றும் தலைமைச் செயலாளர் நேர்முகக் கடிதம் ஆகியவற்றில் தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்பட வேண்டிய பொருள்கள் குறித்து வெளியிடப்பட்டுள்ள நெறி முறைகளின்படி பதவிகளுக்குரிய நியமன முறை அல்லது நியமன முறைகளைப் பாதிக்கக்கூடிய கொள்கை முடிவுகளை எடுக்கும் முன்னர் தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்க வேண்டுமேயன்றி விதிகளை உருவாக்கும் பொழுதோ அல்லது விதித்திருத்தங்களை வெளியிடும் பொழுதோ தேர்வாணையத்தை கலந்தாலோசித்தல் போதுமானதன்று. இந்த உண்மைகள் அரசுக்கு தெரிவிக்கப்பட்டதுடன் எந்தச் சூழ்நிலையில் தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்படவில்லை என தெரிவிக்குமாறும் கோரப்பட்டது. அரசு தனது பதிலில் 1999-2000 மற்றும் 2000-2001 ஆம் ஆண்டுகளுக்கான தலைமைக் கணக்கர்/ ஆட்சி அலுவலர் பதவி உயர்வுக்கு இருமுறை அனுபவத் தகுதி தொடர்பான விதிகளை தளர்த்துவதற்கு தேர்வாணைய பதவி உயர்வுக் குழு ஒப்புக் கொண்டதன் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட செயல்முறை ஆணை தேர்வாணையத்தை கலந்தாலோசிக்காமல் வெளியிடப்பட்டது என தெரிவித்தது. மேலும் இனிவரும் நிகழ்வுகளில் தலைமைச் செயலாளரின் கடிதத்தில் காணும் தெளிவுரை தவறாது பின்பற்றப்படும் என தெரிவித்துள்ளது. இவ்வாறு அரசின் அலுவல் சாரா குறிப்பு எண். 4020/54-2 பொதுத் (பணிகள்) துறை, நாள். 11.09.54 மற்றும் அரசுக் கடித எண் 63278/89-3, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தம் (பணி.எம்) துறை, நாள் 25.09.89 ஆகியவற்றில் அரசால் வெளியிடப்பட்டுள்ள நெறிமுறைகள் செயல்முறை ஆணை வெளியிடுகையில் அரசால் பின்பற்றப்படவில்லை.

இ. அரசின் கொள்கை சம்பந்தப்பட்ட விவகாரங்கள் அல்லது தவிர்க்க முடியாத காரணங்களைத் தவிர பொதுவாகத் தேர்வாணையத்தின் ஆலோசனைகளை அரசு ஏற்றுக்கொள்ளும் என்ற மரபினை விட்டு விலகி அரசு ஆணையிட்டுள்ளது, என்பதை வருத்தத்துடன் குறிப்பிடுவதோடு எதிர் காலத்தில் இது தொடராது என்று தேர்வாணையம் நம்புகிறது. இப்பொருள் குறித்து ஐந்து ஆண்டு புள்ளி விவரம் பின் இணைப்பு -11ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## ஏற்புரை:-

தேர்வாணையம் நடத்திய பல்வேறு தேர்வுகளுக்குப் போதிய இட வசதி செய்து கொடுத்து மனப்பூர்வமாக ஒத்துழைப்பு அளித்த பல்வேறு கல்வி நிறுவனங்கள் மற்றும் அதன் அலுவலர்களுக்கும் தேர்வாணையம் தனது பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறது.

மாநில அரசின் கீழ் உள்ள பல்வேறு பதவிகளுக்கு நடத்தப்பட்டத் தேர்வுகளுக்கும் அலுவலர்களின் தெரிவுகளுக்கும் தேர்வாணையத்தின் அழைப்பினை உடனடியாக ஏற்று அவர்களுடைய சிரமங்களைப் பாராமல் தேர்வாணையத்திற்கு உதவி புரிந்த தேர்வாளர்கள் மற்றும் ஆலோசனை வழங்கிய வல்லுநர்கள் ஆகியோருக்கு இத்தேர்வாணையம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலமாக நியமனம் பெற உரியவேட்பாளர்களைப் பரிந்துரை செய்ய நியமிக்கப்பட்டுள்ள துறைத்தேர்வுக் குழுக்களின் பணி செவ்வனே நடைபெற ஒத்துழைப்பு நல்கிய பல்வேறு அரசுத்துறை செயலாளர்களுக்கும், துறைத் தலைவர்களுக்கும் தேர்வாணையம் தன் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

| | |
|---|---|
| **திருமதி. யாஸ்மீன் அகமது, இ.ஆ.ப., (ஓய்வு)** | **தலைவர்** |
| **திரு. வ.அழகுசுந்தரம், எம்.எஸ்.ஸி.,** | **உறுப்பினர்.** |
| **டாக்டர். இரா. பெருமாள் சாமி, எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி. ,** | **உறுப்பினர்** |
| **டாக்டர். (திருமதி) கு.ம. இராமாத்தாள், எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,** | **உறுப்பினர்** |
| **திரு. இரா. தமிழ்மணி, பி.ஏ.,பி.எல்.,** | **உறுப்பினர்** |

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2.

டாக்டர். ஆர். பாஸ்கரன் இ.ஆ.ப.
செயலாளர்,

நாள்: 24.07.2003

## பின் இணைப்பு - 1

### 31.3.2003 இல் உள்ளபடி தேர்வாணையத்தின் பணியாளர் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | துணைச் செயலாளர் | 4 |
| 2. | சார் செயலாளர் | 27 |
| 3. | கணக்கு அலுவலர் | 1 |
| 4. | உதவிக் கணக்கு அலுவலர் | 1 |
| 5. | ஆராய்ச்சி அலுவலர் | 1 |
| 6 | நூலகர் | 1 |
| 7. | முதுநிலை ஆராய்ச்சி உதவியாளர் | 2 |
| 8. | பிரிவு அலுவலர் | 89 |
| 9. | நேர்முக செயலாளர் | 1 |
| 10. | உள்ளீடு - விளையளவு மேற்பார்வையாளர் (கணிப்பொறி) | 1 |
| 11. | உள்ளீடு - விளையளவு இயக்குபவர் (கணிப்பொறி) | 1 |
| 12. | அடிப்படை விவரங்கள் பதிவு செய்பவர் (கணிப்பொறி) | 8 |
| 13. | கணக்கர் | 26 |
| 14. | உதவிப் பிரிவு அலுவலர் | 190 |
| 15. | நேர்முக உதவியாளர் | 6 |
| 16. | நேர்முக எழுத்தர் | 8 |
| 17. | தொலைப்பேசி இயக்குபவர் | 2 |
| 18. | உதவியாளர் | 99 |
| 19. | தட்டச்சர் | 37 |
| 20 | ஊர்தி ஓட்டுநர் | 9 |
| 21. | பதிவுரு உதவியாளர் | 2 |
| 22 | பதிவுரு எழுத்தர் | 21 |
| 23. | மின் தூக்கி இயக்குபவர் | 1 |
| 24. | முதன்மை ஏவலர் | 1 |
| 25. | அலுவலக உதவியாளர் | 69 |
| 26. | காவலர் | 6 |
| 27. | பெருக்குபவர் | 4 |
| 28 | துப்புரவுப் பணியாளர் | 3 |
| 29. | குடிநீர் வைப்பவர் | 1 |

# பின் இணைப்பு - II
## நேரடித் தெரிவு இறுதி முடிவுகள் வெளியிடப்பட்ட பதவிகளின் விவரம் - 2002-2003 ஆம் ஆண்டு

| வரிசை எண் | பதவி, துறை மற்றும் பணியின் பெயர் | விண்ணப்பம் பெற கடைசி நாள் | தெரிவு முடிவுகள் தெரிவிக்கப்பட்ட நாள் | காலியிடங்களின் எண்ணிக்கை: ஆதி | பழ | மிபிவ | பிவ | பொது | கூடுதல் | பெறப்பட்ட விண்ணப்பங்கள் | முதனிலைத் தேர்வில் கலந்து கொண்டவர்கள் | முதன்மைத் தேர்வில் கலந்து கொண்டவர்கள் | வாய்மொழித் தேர்வில் கலந்து கொண்டவர்கள்: ஆதி | பழ | மிபிவ | பிவ | மற்ற | கூடுதல் | இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள்: ஆதி | பழ | மிபிவ | பிவ | மற்ற | கூடுதல் | தெரிவு செய்யப்பட்டவர்களின் கல்வித் தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) | (18) | (19) | (20) | (21) | (22) | (23) | (24) | (25) | (26) | (27) |
| | **I - மாநிலப் பணிகள்** | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 1. | உரிமையியல் நீதிபதி (இளநிலைப்பிரிவு /குற்றவியல் நீதிபதி முதல்வகுப்பு) தமிழ்நாடு மாநில நீதிப்பணி, | 04.10 01 | 23 04.02 | 5 (1) | 3 | 3 (1) | 4 (1) | 3 (1) | 18 (4) | 1768 | - | 1748 | 11 (3) | 2 | 10 (4) | 17 (5) | 2 (1) | 42 (13) | 5 (1) | 1 | 3 (2) | 7 (2) | - | 16 (5) | [illegible] | 3 -பிவ பொதுப்போட்டியில் தெரிவு பெற்றனர். 2- பழ காலியிடம் அடுத்த தெரிவிற்கு கொண்டு செலைப்பட்டது. |
| 2. | தொகுதி-I பணிகள் | 25 01 00 | 15.06 02 | 12 (4) | - | 15 (6) | 24 (7) | 23 (7) | 74 (24) | 75,158 | 70,402 | 602 | 31 (18) | - | 47 (24) | 70 (34) | - | 148 (76) | 15 (6) | - | 22 (7) | 37 (11) | - | 74 (24) | [illegible] | 3- ஆதி 7-மி.பி.வ , 13-பி.வ பொதுப்போட்டியில் தெரிவு பெற்றனர். |
| 3. | வேளாண்மை அலுவலர் (விரிவாக்கம்) மற்றும் வேளாண்மை அலுவலர் (வேதியியல்) த, நா. வேளாண்மை விரிவாக்கப்பணி மற்றும் த.நா. வேளாண்மைப்பணி | 05 08 99 | 17 07.02 | 20 (6) | 1 | 24 (5) | 37 (10) | 37 (10) | 119 (34) | 3474 | - | 2734 | 40 | 3 | 48 | 74 | 74 | 239 | 21 (7) | 1 | 27 (6) | 67 (22) | 3 | 119 (34) | பி.எஸ்சி(வேளாண்) - 84 எம்.எஸ்சி(வேளாண்)-35 | 1-ஆதி, 3 -மி.பி.வ 30- பி.வ பொதுப்போட்டியில் தெரிவு பெற்றனர். |
| 4. | உதவி இயக்குநர் தொழில் மற்றும் வணிகம் / அலகு கண்காணிப்பாளர், த.நா. தொழில் பணி, | 19 07 00 | 17 07 02 | - | - | 1 | 1 | 1 (1) | 3 (1) | 598 | - | 312 | - | - | 3 | 4 (1) | 2 (2) | 9 (3) | - | - | 1 | 1 | 1 (1) | 3 (1) | [illegible] | |
| 5 | உதவி மருத்துவ அலுவலர் (சித்தா/ ஆயுர்வேதா/ யுனானி) தமிழ்நாடு மருத்துவப்பணி | 17 10 01 | 04 10 02 | 11 (3) | - | 9 (3) | 12 (4) | 15 (4) | 47 (14) | 1455 | - | 1281 | 25 (17) | - | 23 (13) | 49 (20) | 1 (1) | 98 (51) | 12 (8) | - | 13 (7) | 22 (10) | - | 47 (25) | [illegible] | 1-ஆதி. 4 - மி.பி.வ. 10 -பி.வ பொதுப்போட்டியில் தெரிவு பெற்றனர், |
| 6. | உதவி மருத்துவ அலுவலர் (சித்தா/ ஆயுர்வேதா/ யுனானி) தமிழ்நாடு மருத்துவப்பணி | 25 09 02 | 03.01.03 | 16 (5) | 1 | 19 (6) | 26 (7) | 27 (9) | 89 (27) | 1581 | - | 1378 | 29 (16) | 4 (2) | 40 (28) | 98 (51) | 5 (3) | 176 (100) | 14 (9) | 1 | 18 (12) | 49 (24) | 3 (3) | 85 (48) | [illegible] | 3- மி.பி.வ. 23 -பி.வ பொதுப்போட்டியில் தெரிவுபெற்றனர். 2-ஆதி 2-மி.பி.வ. யுனானி காலியிடங்கள் அடுத்ததெரிவிற்கு எடுத்து செல்லபபட்டன |
| 7. | மாவட்ட கல்வி அலுவலர் தமிழ்நாடு பள்ளிக் கல்விப்பணி | 25 07.01 | 22 01 03 | 2 (1) | - | 2 (1) | 2 (1) | 3 (1) | 9 (4) | 1648 | - | 1039 | 6 (3) | - | 9 (5) | 12 (4) | - | 27 (12) | 2 (1) | - | 2 (1) | 5 (2) | - | 9 (4) | [illegible] | 3- பி.வ பொதுப்போட்டியில் தெரிவுபெற்றனர் |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) | (18) | (19) | (20) | (21) | (22) | (23) | (24) | (25) | (26) | (27) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **IIசார்நிலைப் பணிகள்** | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 8. | இளநிலைப் பயிற்சி அலுவலர் (மொழி -ஆங்கிலம்) த.நா. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி சார்நிலைப்பணி. | 10 10.01 | 15 04.02 | - | - | - | - | 1 | 1 | 71 | - | 48 | - | - | - | 3 | - | 3 | - | - | - | 1 | - | 1 | எம ஏ (ஆங்கிலம)-1 | 1 பி வ. பொதுப் போட்டியில் தெரிவு பெற்றார். |
| 9 | தமிழ் பண்டிதர் நிலை-1 ஆண்கள் பிரிவு தமிழ்நாடு சமூகப்பாதுகாப்பு சார்நிலைப்பணி | 12 09.01 | 15 04 02 | 1 | - | - | - | 1 | 2 | 66 | - | 35 | 3 (1) | - | - | 2 | 1 | 6 (1) | 1 | - | - | 1 | - | 2 | எம ஏ (தமிழ்)பி எட-2 | 1பி வ பொதுப்போட்டியில் தெரிவு பெற்றார் |
| 10 | கண்காணிப்பாளர் அரசுகாப்பகங்கள் தமிழ்நாடு சமூகப்பாதுகாப்பு சார்நிலைப்பணி | 12.09.01 | 23.04 02 | - | - | - | - | 1 (1) | 1 (1) | 10 | - | 4 | 1 (1) | - | 1 (1) | 1 (1) | - | 3 (3) | - | - | - | 1 (1) | - | 1 (1) | எம எஸ சி (தடய அறிவியல) - 1 | 1 பி வ பொதுப்போட்டியில் தெரிவு பெற்றார் |
| 11 | உதவி நூலகர் அரசு சட்டக்கல்லூரிகள் த.நா. அமைச்சுப்பணி | 05.09 01 | 18 06.02 | - | - | - | - | 1 | 1 | 214 | - | 102 | - | - | 1 | 2 | - | 3 | - | - | 1 | - | - | 1 | பி லிட், பி எட சி எல், ஜ எஸ, - 1 | 1 மி பி வ பொதுப் போட்டியில் தெரிவு பெற்றார |
| 12. | விடுதி கண்காணிப்பாளர் மற்றும் உடற்பயிற்சி அலுவலர் த.நா. வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி சார்நிலைப்பணி | 10 10.01 | 15.07 02 | - | - | - | - | 1 | 1 | 34 | - | 21 | 1 | - | - | 2 | - | 3 | - | - | - | 1 | - | 1 | பி லிட எம்பி எட்,-1 | 1 பி வ பொதுப்போட்டியில் தெரிவு பெற்றார் |
| 13. | ஆங்கில நிருபர் த.நா. சட்டமன்ற தலைமைச் செயலகப் பணி | 28 11 01 | 14 08.02 | - | - | - | - | 1 | 1 | 9 | - | 1 | - | - | - | - | 1 | 1 | - | - | - | - | 1 | 1 | பி காம, ஆஙகிலம தட்டச்சு முதுநிலை மற்றும் சுருக்கெழுத்து ஆங்கிலம் அதிவேகம்-1 | |
| | கூடுதல் | | | | | | | | 366 | 86,086 | 70,402 | 9,305 | | | | | | 858 | | | | | | 360 | | |

# பின் இணைப்பு - 3
## (தொடர்புப்பகுதி - 1 )
## 2002-2003 ஆம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் செலவு விபரங்களின் அட்டவணை

| இனங்கள் (1) | ( ரூபாய் ஆயிரங்களில் ) (2) |
|---|---|
| அ) வருவாய் | |
| விண்ணப்பப் படிவம் விற்பனை | 31,03 |
| துறைத் தேர்வுகள் கட்டணம் | 16,43 |
| நேரடித் தேர்வுகள் கட்டணம் | 27,75 |
| தேர்வுக் கட்டணம் திருப்பிக் கொடுக்கப்பட்டது. | (-) 4 |
| மொத்தம் | **75,17** |
| ஆ) செலவு | |
| அடிப்படைச் சம்பளம் | 4,17,15 |
| அகவிலைப்படி | 1,98,04 |
| மருத்துவச் செலவுகள் | 10,89 |
| ஏனையப் படிகள் | 62,00 |
| பயணச் சலுகைகள் | 4,08 |
| பண்டிகை முன் பணம் | 3,36 |
| பயணச் செலவுகள் | 1,21 |
| தொலைப்பேசிக் கட்டணங்கள் | 4,73 |
| ஏனைய சில்லரைச் செலவுகள் | 26,00 |
| தொழில்சார் சிறப்புப்பணிகளுக்குத் தொகை கோருதல் | 1,73,16 |
| பரிசுகள் மற்றும் விருதுகள் | 9 |
| வாடகை / வரிகள் | 3,54 |
| விளம்பரச் செலவுகள் | 31,33 |
| இயந்திரம் பராமரிப்பு மற்றும் வாங்குதல் | 70 |
| மோட்டார் வாகன பராமரிப்பு மற்றும் வாங்குதல் | 40 |
| மோட்டார் வாகன எரிப்பொருள் செலவு | 5.50 |
| கூலி | 18,88 |
| மின்சாரக் கட்டணம் | 7,24 |
| கணிப்பொறி | 3,08 |
| மொத்தம் | **9,71,38** |

## பின் இணைப்பு - 4

## 2002-2003 ஆம் ஆண்டு வெளியான அறிவிக்கை விளம்பரங்கள்

| வ. எண். (1) | பதவி மற்றும் பணியின் பெயர் (2) | அறிவிக்கை நாள் (3) | காலியிடங்கள் எண்ணிக்கை (4) | பெறப்பட்ட விண்ணப்பங்கள் (5) |
|---|---|---|---|---|
| 1 | உதவி மருத்துவ அலுவலர் (சித்தா/ஆயுர்வேத/யுனானி) தமிழ்நாடு மருத்துவப் பணி | 20.08.2002 | 89 | 1545 |
| 2. | ஒருங்கிணைந்த சார்நிலைப்பணிகள் -I நகராட்சி ஆணையர் நிலை- II, தமிழ்நாடு நகராட்சிகளின் ஆணையர் சார்நிலைப்பணி | 14.11.2002 | 22 | 36,171 |
| 3. | தொகுதி-VIII பணிகள், நிர்வாக அலுவலர் நிலை-4, தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சிசார் நிலைப்பணி (மறு விளம்பரம்) | 22.11.2002 | 76 | 93,899 |
| 4. | உரிமையியல் நீதிபதி (இளநிலைப்பிரிவு/ குற்றவியல் நீதிபதி முதல் வகுப்பு) தமிழ்நாடு மாநில நீதிப்பணி | 25.02.2003 | 39 | 4,171 |
| | கூடுதல் | | 226 | 1,35,786 |

## பின் இணைப்பு - 5

## 2002-2003 ஆம் ஆண்டு தேர்வுகள் நடந்தவை பட்டியல்

I. முதல் நிலைத் தேர்வு: --- ஏதுமில்லை.

II. முதன்மை எழுத்துத்தேர்வுகள்

| வ. வண் | பதவியின் பெயர் மற்றும் பணிகள் | காலியிடங்களின் எண்ணிக்கை | பெறப்பட்ட விண்ணப்பங்கள் | எழுத்துத் தேர்வு நடைபெற்ற நாட்கள் |
|---|---|---|---|---|
| 1 | உதவிப் புள்ளியியலர், நிலத்தடி நீர்ப்பிரிவு பொதுப்பணித் துறை, தமிழ் நாடு பொறியியல் சார்நிலைப்பணி | 5 | 297 | 20.04.2002 மற்றும் 21.04.2002 |
| 2. | ஆங்கில நிருபர் தமிழ்நாடு சட்டமன்ற செயலகப்பணி | 1 | 9 | 20.04.2002 மற்றும் 21.04.2002 |
| 3 | உதவி மருத்துவ அலுவலர் (சித்தா/ஆயுர்வேதா/யுனானி) தமிழ்நாடு மருத்துவப் பணி | 89 | 1545 | 23.10.2002 மற்றும் 24.10.2002 |
| 4. | ஒருங்கிணைந்த சார்நிலைப்பணி-I, நகராட்சி ஆணையர், நிலை-2, தமிழ்நாடு நகராட்சி ஆணையர்கள் சார்நிலைப்பணி (நகராட்சி பணியாளர்கள் மட்டும்) | 12 | 35 | 23.02.2003 |
| 5. | ஒருங்கிணைந்த சார்நிலைப்பணி-1, நகராட்சி ஆணையர், நிலை-2, தமிழ்நாடு நகராட்சி ஆணையர்கள் சார்நிலைப்பணி | 10 | 36,171 | 01.03.2003 மற்றும் 02.03.2003 |
| | கூடுதல் | 117 | 38,057 | |

## III. வாய் மொழித் தேர்வு விவரம்

| வ. எண். | நாள் | பதவி மற்றும் பணியின் பெயர் | குழுமம் | | | | | | அனுமதிக்கப் பட்டவர்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | I | II | III | IV | V | VI | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | |
| 1 | 08 04 2002 | வேளாண்மை அலுவலர் (விரிவாக்கம்) தமிழ்நாடு வேளாண்மை விரிவாக்கப்பணி மற்றும் வேளாண்மை அலுவலர் (வேதியியல்) தமிழ்நாடு வேளாண்மைப்பணி | 14 | 14 | 14 | 14 | 14 | - | 70 |
| | 09 04.2002 | - மேற்படி - | 14 | 14 | 14 | 14 | 14 | - | 70 |
| | 10 04 2002 | - மேற்படி - | 14 | 14 | 14 | 14 | 14 | - | 70 |
| | 11 04 2002 | - மேற்படி - | 6 | 6 | 6 | 6. | 5 | - | 29 |
| 2 | 12 04.2002 | உரிமையியல் நீதிபதி (இளநிலை பிரிவு / குற்றவியல் நீதிபதி முதல் வகுப்பு) தமிழ்நாடு மாநில நீதிப்பணி | 9 | 9 | 8 | 8 | 8 | - | 42 |
| 3 | 15 04.2002 | கண்காணிப்பாளர் அரசு காப்பகங்கள் தமிழ்நாடு சமூக பாதுகாப்பு சார்நிலைப் பணி 2001-2002 | 3 | - | - | - | - | - | 3 |
| 4. | 15.04 2002 | தமிழ் பண்டிட் நிலை -1 ஆண்கள் பிரிவு தமிழ்நாடு சமூகப்பாதுகாப்பு சார்நிலைப்பணி | - | 6 | - | - | - | - | 6 |
| 5. | 15 04 2002 | இளநிலை பயிற்சி அலுவலர் (மொழி - ஆங்கிலம்) பயிற்சி பிரிவு, தமிழ்நாடு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி சார்நிலைப்பணி | - | - | 3 | - | - | - | 3 |
| 6 | 18 06 2002 | உதவி இயக்குநர் தொழில் மற்றும் வணிகம்/ பகுதி கண்காணிப்பாளர் தமிழ்நாடு தொழில் பணி | 5 | 4 | - | - | - | - | 9 |
| 7 | 18 06.2002 | உதவி நூலகர், அரசு சட்டக்கலலூரிகள், தமிழ்நாடு அமைச்சுப்பணி 2001-2002 | - | - | 3 | - | - | - | 3 |
| 8 | 18 06.2002 | விடுதிகண்காணிப்பாளர் மற்றும் உடற்பயிற்சி அலுவலர் தமிழ்நாடு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி சார்நிலைப்பணி | - | - | - | - | 3 | - | 3 |
| 9 | 12 08 2002 | துறைத்தேர்வுகள் மே-2002, இரண்டாம் மற்றும் மூன்றாம் வகுப்பு மொழித் தேர்வு (வாய்மொழித் தேர்வு) ஆகஸ்ட் -2002 | 20 | 21 | 19 | 20 | 20 | - | 100 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10. | 12.08.2002 | ஆங்கில நிருபர்,தமிழ்நாடு சட்டப்பேரவை செயலகப்பணி | - | - | - | - | - | 1 | 1 |
| 11. | 11.09.2002 | உதவி மருத்துவ அலுவலர் (சித்தா/ஆயுர்வேதா/யுனானி) தமிழ்நாடு மருத்துவ பணி 1999-2000 | 13 | 13 | 13 | - | - | - | 39 |
| | 12.09.2002 | -மேற்படி- | 13 | 13 | 13 | - | - | - | 39 |
| | 13.09.2002 | -மேற்படி- | 8 | 9 | 3 | - | - | - | 20 |
| 12. | 16.12.2002 | உதவி மருத்துவ அலுவலர் (சித்தா/ஆயுர்வேதா/யுனானி) தமிழ்நாடு மருத்துவ பணி 2002 | 13 | 13 | 13 | - | - | - | 39 |
| | 17.12.2002 | -மேற்படி- | 13 | 13 | 13 | - | - | - | 39 |
| | 18.12.2002 | -மேற்படி- | 13 | 13 | 13 | - | - | - | 39 |
| | 19.12.2002 | -மேற்படி- | 13 | 13 | 13 | - | - | - | 39 |
| | 20.12.2002 | - மேற்படி - | 5 | 9 | 6 | - | - | - | 20 |
| 13. | 09.01.2003 | மாவட்ட கல்வி அலுவலர் தமிழ்நாடு பள்ளிக்கல்விப் பணி | 6 | 6 | 6 | - | - | - | 18 |
| | 10.01.2003 | -மேற்படி - | 3 | 3 | 3 | - | - | - | 9 |
| | | மொத்தம் | 185 | 193 | 177 | 76 | 78 | 1 | 710 |

## பின் இணைப்பு - 6

(தொடர்பு பகுதி - 3)

பொருத்தமும் தகுதியும் உடைய பணி வேட்பாளர்கள் இல்லாமை குறித்த விவரம்

| வ. எண் | பதவியின் பெயர் | பணி | ஒதுக்கப்பட்ட காலியிடங்கள் | தகுதியுடையவர்கள் | தெரிவு செய்யப்பட்டவர்கள் | நிரப்பப்படாத காலியிடங்கள் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| அ. | பொதுப்போட்டி | இல்லை | | | | | |
| ஆ. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | இல்லை | | | | | |
| இ | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | | | | | | |
| 1. | உதவி மருத்துவ அலுவலர்-யுனானி | தமிழ்நாடு மருத்துவ பணி | 2 | - | - | 2 | பொருத்தமான கல்வித் தகுதி உடைய வேட்பாளர்கள் கிடைக்கவில்லை |
| ஈ. | ஆதிதிராவிடர் | | | | | | |
| 1. | உதவி மருத்துவ அலுவலர்-யுனானி | தமிழ்நாடு மருத்துவ பணி | 2 | - | - | 2 | பொருத்தமான கல்வித் தகுதி உடைய வேட்பாளர்கள் கிடைக்கவில்லை |
| உ. | பழங்குடியினர் | | | | | | |
| 1. | உரிமையியல் நீதிபதி (இளநிலைப் பிரிவு/குற்றவியல் நீதிபதி முதல் வகுப்பு) | தமிழ்நாடு மாநில நீதிப்பணி | 3 | 1 | 1 | 2 | பொருத்தமான கல்வித் தகுதி உடைய வேட்பாளர்கள் கிடைக்கவில்லை |
| | | கூடுதல் | 7 | 1 | 1 | 6 | |

## பின் இணைப்பு -7
(தொடர்புப்பகுதி -4)
## பணி மாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலம் வேட்பாளர்கள் தேர்வு செய்யப்பட்ட விவரம்

| வ. எண் | பதவியின் பெயர் | பணி | பணி வேட்பாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | உதவி வேளாண்மை இயக்குநர் (விரிவாக்கம்) | தமிழ்நாடு வேளாண்மை விரிவாக்கப்பணி | 28 |
| 2. | கண்காணிப்பாளர், சீர்திருத்தப்பள்ளிகள் மற்றும் சிறுவர்கள் சீர்திருத்தப்பள்ளிகள் | தமிழ்நாடு சீர்திருத்தப்பள்ளிகள் மற்றும் கண்காணிப்புப் பணி | 01 |
| 3. | மாவட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபாண்மை நல அலுவலர் | தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலப்பணி | 1 |
| 4. | உதவி இயக்குநர், கூட்டுறவு தணிக்கை | தமிழ்நாடு கூட்டுறவுப் பணி | 40 |
| 5. | துணைப்பதிவாளர், கூட்டுறவு சங்கங்கள் | தமிழ்நாடு கூட்டுறவுப் பணி | 46 |
| 6. | துணை மாவட்ட ஆட்சியர் | தமிழ்நாடு குடிமைப்பணி | 94 |
| 7. | உதவி நிர்வாகப் பொறியாளர் (கட்டிடம்) | தமிழ்நாடு பொறியியல் பணி | 72 |
| 8. | உதவி நிர்வாகப் பொறியாளர், (மின்னியல்) | தமிழ்நாடு பொறியியல் பணி | 08 |
| 9. | தலைமை வரைவு அலுவலர் | தமிழ்நாடு பொறியியல் பணி | 07 |
| 10. | நேர்முக உதவியாளர், தீயணைப்பு மற்றும் மீட்புத்துறை இயக்குநரகம் | தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி | 03 |
| 11. | உதவி இயக்குநர் (மீன்வளம்) | தமிழ்நாடு மீன்வளப்பணி | 08 |
| 12. | நிர்வாக அலுவலர் கால்நடைபராமரிப்புத் துறை | தமிழ்நாடு பொதுப்பணி | 06 |
| 13 | நிர்வாக அலுவலர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை | தமிழ்நாடு பொதுப்பணி | 09 |
| 14. | நிர்வாக அலுவலர் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித்துறை | தமிழ்நாடு பொதுப்பணி | 10 |
| 15. | நிர்வாக அலுவலர் பொது சுகாதாரம் மற்றும் காப்பு மருந்துத் துறை | தமிழ்நாடு பொதுப்பணி | 14 |
| 16. | நிர்வாக அலுவலர் பொதுப்பணித்துறை | தமிழ்நாடு பொதுப்பணி | 25 |
| 17. | உதவி ஆணையர் (வகுப்பு -XXV) | தமிழ்நாடு பொதுப்பணி | 02 |
| 18. | உதவி ஆணையர் (நிலச்சீரமைப்பு) (தலைமையிடம்) (வகுப்பு -LXVIII) | தமிழ்நாடு பொதுப்பணி | 02 |
| 19. | உதவி ஆணையர் நிலச்சீரமைப்பு (மாவட்டம்) | தமிழ்நாடு பொதுப்பணி | 02 |
| 20. | உதவி இயக்குநர், (சர்க்கரை) (தொழில்நுட்பமற்றது) | தமிழ்நாடு பொதுப்பணி | 02 |
| 21. | தானியங்கி பொறியாளர், இயக்கூர்திகள் பராமரிப்புத் துறை | தமிழ்நாடு பொதுப்பணி | 01 |
| 22. | சிறார் மேம்பாட்டு திட்ட அலுவலர் | தமிழ்நாடு பொதுப்பணி | 49 |
| 23. | துணை கணக்கு அலுவலர் (நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித்துறை) | தமிழ்நாடு பொதுப்பணி | 02 |
| 24. | துணை காவல் துறை கண்காணிப்பாளர் (தொழில்நுட்பமுள்ளது) | தமிழ்நாடு பொதுப்பணி | 06 |
| 25. | நேர்முக உதவியாளர், (நிர்வாகம்) காவல் துறை. | தமிழ்நாடு பொதுப்பணி | 167 |

| | | | |
|---|---|---|---|
| 26. | நேர்முக உதவியாளர், மறுவாழ்வுத் துறை ஆணையாளர் | தமிழ்நாடு பொதுப்பணி | 03 |
| 27. | சிறைகண்காணிப்பாளரின் நேர்முக உதவியாளர் | தமிழ்நாடு பொதுப்பணி | 01 |
| 28. | நேர்முக உதவியாளர், வனத்துறை | தமிழ்நாடு பொதுப்பணி | 05 |
| 29. | நேர்முக உதவியாளர், மீன்வளத்துறை | தமிழ்நாடு பொதுபபணி | 05 |
| 30. | செயலாளர், அரசுத் தேர்வுத்துறை மண்டலத் துணை இயக்குநரகம் | தமிழ்நாடு பொதுப்பணி | 02 |
| 31. | பேச்சுக் குறையகற்று பயிற்சியாளர் | தமிழ்நாடு பொதுப்பணி | 1 |
| 32. | சார் செயலாளர், நிதித்துறை | தமிழ்நாடு பொதுப்பணி | 11 |
| 33. | சார செயலாளர், சட்டம் மற்றும் நிதித் துறை நீங்கலாக | தமிழ்நாடு பொதுப்பணி | 72 |
| 34. | உதவி ஆணையர், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை | தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலை ஆட்சிப்பணி | 07 |
| 35. | உதவி இயக்குநர், (மின்னாற்றல் மற்றும் மின்னனுவியல்) தொழில் மற்றும் வணிகத் துறை | தமிழ்நாடு தொழில் பணி | 01 |
| 36. | உதவி இயக்குநர், (நில அளவை மற்றும் புள்ளியியல்) தொழில் மற்றும் வணிகத்துறை | தமிழ்நாடு தொழில் பணி | 04 |
| 37. | உதவி இயக்குநர், (தொழில் கூட்டுறவு), தொழில் மற்றும் வணிகத்துறை | தமிழ்நாடு தொழில் பணி | 17 |
| 38. | உதவி இயக்குநர் (தொழில் நுட்பம்)/அலகு கண்காணிப்பாளர், தொழில் மற்றும் வணிகத்துறை | தமிழ்நாடு தொழில் பணி | 03 |
| 39. | நேர்முக உதவியாளர், (தொழில்நுட்பமற்றது) தொழில் மற்றும் வணிகத் துறை | தமிழ்நாடு தொழில் பணி | 01 |
| 40. | வட்டார நன்னடத்தை பொறுப்பு அலுவலா | தமிழ்நாடு சிறைப் பணி | 02 |
| 41. | தொழிலாளர் நல அலுவலர். | தமிழ்நாடு தொழிலாளர் நலப்பணி | 04 |
| 42. | முதுநிலை வேதியியல் உதவியாளர். (Centralised filling) | தமிழ்நாடு மருத்துவப்பணி | 02 |
| 43 | முதுநிலை மருத்துவ ஆவண அலுவலர் | தமிழ்நாடு மருத்துவப்பணி | 03 |
| 44 | ஊரக வளர்ச்சித் துறையில் உதவி இயக்குநர்/ மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர். | தமிழ்நாடு பஞ்சாயத்துவளர்ச்சிப் பணி | 64 |
| 45 | உதவிப்பொறியாளர், ஊரக வளர்ச்சித் துறை | தமிழ்நாடு பஞ்சாயத்து வளர்ச்சிப் பணி | 148 |
| 46. | துணை காவல் துறை கண்காணிப்பாளர், வகை-2 | தமிழ்நாடு காவல் பணி | 14 |
| 47. | துணை காவல் துறை கண்காணிப்பாளர் (விரல் ரேகை) | தமிழ்நாடு காவல் பணி | 20 |
| 48 | முதன்மை பகுப்பாய்வாளர் | தமிழ்நாடு சுகாதரப்பணி | 3 |
| 49. | மாவட்டப் பதிவாளர் | தமிழ்நாடு பதிவுப்பணி | 11 |
| 50 | உதவி இயக்குநர், நில அளவை மற்றும் நில பதிவுத் துறை | தமிழ்நாடு நில அளவை மற்றும் நில பதிவுப்பணி | 7 |
| 51 | கணக்கு அலுவலர், நிலை -3 | தமிழ்நாடு கருவூலம் மற்றும் கணக்குப் பணி | 48 |
| | கூடுதல் | | 1064 |

# பின் இணைப்பு - 8

(தொடர்பு பகுதி - 4)

## மேல் முறையீடு / மறு ஆய்வு மனு / ஒழுங்கு நடவடிக்கை/ ஓய்வூதியம் பிடித்தம் பற்றிய விபரங்கள்

| வ. எண் | துறையின் பெயர் | மேல் முறையீடு/ மறு ஆய்வு /சீராய்வுமனுக்கள் | | ஒழுங்கு நடவடிக்கை | | ஓய்வூதியம் பிடித்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | குற்றச்சாட்டுகளுக்கு உட்படுத்தப்பட்ட நிகழ்வுகளின் எண்ணிக்கை | | | | | |
| | | நேர்மைக்கு புறம்பாக நடந்து கொண்ட நிகழ்வுகள் | வேறு வகையில் குற்றம் சாட்டப்பட்ட நிகழ்வுகள் | நேர்மைக்கு புறம்பாக நடந்து கொண்ட நிகழ்வுகள் | வேறு வகையில் குற்றம் சாட்டப்பட்ட நிகழ்வுகள் | நேர்மைக்கு புறம்பாக நடந்து கொண்ட நிகழ்வுகள் | வேறு வகையில் குற்றம் சாட்டப்பட்ட நிகழ்வுகள் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1. | வேளாண்மை | 1 | 10 | 1 | 16 | - | 2 |
| 2. | கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளம் | - | 12 | 1 | 7 | - | 1 |
| 3. | கல்வி | - | 14 | - | 4 | - | 1 |
| 4. | வணிக வரி மற்றும் அறநிலையத் துறை | 1 | 12 | - | 15 | - | 3 |
| 5. | உள்துறை | 2 | 15 | - | 10 | - | 2 |
| 6. | வருவாய்த்துறை | - | 7 | - | 12 | - | 3 |
| 7. | நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 1 | 23 | 1 | 19 | - | 6 |
| 8. | கூட்டுறவு | - | 2 | - | 3 | - | - |
| 9. | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு | - | 8 | 1 | 5 | - | - |
| 10. | சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனம் | 1 | 12 | 1 | 10 | - | 4 |
| 11. | நெடுஞ்சாலைத் துறை | 1 | 6 | - | 7 | - | - |
| 12. | சிறு தொழில்கள் | - | - | - | 4 | - | - |
| 13. | செய்தி மற்றும் சுற்றுலாத்துறை | - | 4 | - | 3 | - | 1 |
| 14. | சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை | 2 | 24 | 2 | 31 | - | 2 |
| 15. | கைத்தறி கைவினைப் பொருட்கள் துணி மற்றும் கதர் | - | 2 | - | 4 | - | - |
| 16. | எரிசக்தி | 1 | - | - | - | - | - |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|---|---|---|---|
| 17. | பொதுப் பணித்துறை | - | 8 | - | 12 | - | 3 |
| 18. | நிதி | - | 14 | - | 6 | - | 1 |
| 19. | சமூக நலம் | - | 4 | - | 3 | - | - |
| 20. | வீட்டுவசதி மற்றும் நகர்புறம் | - | - | - | 1 | - | 1 |
| 21. | பொது | - | 1 | - | 4 | - | 2 |
| 22. | ஊரக வளர்ச்சி | - | 11 | - | 20 | - | 4 |
| 23. | ஆதி திராவிடர் நலம் | - | 1 | - | 3 | - | - |
| 24. | போக்குவரத்து | - | 3 | - | 3 | - | - |
| 25. | தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு | - | 5 | - | 4 | - | - |
| | மொத்தம் | 10 | 198 | 07 | 206 | - | 36 |

| | |
|---|---|
| மேல் முறையீடு / மறு ஆய்வு சீராய்வு மனுக்கள் | 208 |
| ஒழுங்கு நடவடிக்கை | 213 |
| ஓய்வூதியம் பிடித்தம் | 36 |
| மொத்தம் | 457 |

## பின் இணைப்பு - 9
(தொடர்பு பகுதி - 4)

அ. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் ஒழுங்குமுறை விதி 1954 - ல் விதி 16 (பி) பிற்பகுதியின் கீழ் செய்யப்பட்ட நியமனங்கள்:

1. மாநிலப்பணிகள்

| வ. எண் | துறையின் பெயர் | பதவியின் பெயர் | நிகழ்வுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | மருத்துவத்துறை | உதவி மருத்துவ அலவலர் | 1 |
| 2. | பொதுப் பணித்துறை | உதவிப் பொறியாளர் | 5 |
| 3. | வேளாண்மைத் துறை | வேளாண்மை அலுவலர் | 2 |
| 4. | கால்நடைத்துறை | கால்நடை உதவி மருத்துவர் | 1 |
| | கூடுதல் | | 9 |

2. சார்நிலைப் பணிகள்

| வ. எண் | துறையின் பெயர் | பதவியின் பெயர் | நிகழ்வுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | போக்குவரத்துத் துறை | உந்தூர்தி ஆய்வாளர், தரம் -2 | 1 |
| | கூடுதல் | | 1 |

3. அமைச்சுப்பணிகள்

| வ. எண் | துறையின் பெயர் | இளநிலை உதவியாளர் | தட்டச்சர் | கிராம நிர்வாக அலுவலர் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | வருவாய் | 216 | 13 | 21 |
| 2. | இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு | 33 | - | - |
| 3. | சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை | 90 | - | - |
| 4 | நெடுஞ்சாலை மற்றும் கிராமவளர்ச்சி | 30 | - | - |
| 5 | கருவூலம் மற்றும் கணக்கு | 65 | - | - |
| 6 | சுற்றுச் சூழல் மற்றும் வனம் | 9 | - | - |
| 7. | கைத்தறி மற்றும் துணித் துறை | 4 | - | - |
| 8. | எரிசக்தி | 1 | - | - |
| 9. | உயர் கல்வி | 8 | - | - |
| 10 | வணிகம் மற்றும் அறநிலையத்துறை | 185 | - | - |
| 11. | செய்தி மற்றும் சுற்றுலா | 6 | - | - |
| 12. | வேளாண்மைத் துறை | 27 | - | - |
| 13 | பேரூராட்சி | 2 | - | - |
| 14 | தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு | 1 | - | - |
| 15. | சிறு தொழில் | 1 | - | - |
| 16 | தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு | 9 | - | - |
| 17 | முன்னாள் படைவீரர் நலம் | 1 | - | - |
| 18. | போக்குவரத்து | 1 | - | - |
| 19 | சமூகநலம் மற்றும் சத்துணவுத்திட்டம் | 2 | - | - |
| 20 | கூட்டுறவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு | 9 | - | - |
| 21 | உள்துறை | 55 | - | - |
| 22. | கல்வித் துறை | 32 | - | - |
| 23 | பொதுப்பணி துறை | 39 | - | - |
| 24. | கிராமப் புற வளர்ச்சி | 97 | - | - |
| 25 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் | 2 | - | - |
| 26 | நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் | 1 | - | - |
| 27 | தேசிய மாணவர் படை | 2 | - | - |
| | கூடுதல் | 928 | 13 | 21 |

| | |
|---|---|
| 1. மாநிலப் பணிகள் | 9 |
| 2. சார்நிலைப் பணிகள் | 1 |
| 3. அமைச்சுப் பணிகள் | 962 |
| கூடுதல் | 972 |

ஆ.தேர்வாணைய ஒழுங்கு முறை விதி 16(பி) 1954-இன் பிற்பகுதியின்படி தேர்வாணைய இசைவு மறுக்கப்பட்டது.

-ஏதும் இல்லை -

## பின் இணைப்பு -10

### (தொடர்பு பகுதி -4)

தற்காலிக நியமனங்களுக்கு மாநிலப் பணி/ சார்நிலைப் பணி / அமைச்சுப்பணிகளில் 24 மாதங்களுக்கு மேல் தேர்வாணையத்தின் இசைவு அளிக்கப்பட்ட விவரங்கள்

| வரிசை எண் | பதவியின் பெயர் | துறையின் பெயர் | நபர்களின் எண்ணிக்கை | குறிப்பு |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | மாநிலப் பணிகள் | | -இல்லை- | |
| | சார்நிலைப்பணிகள் | | -இல்லை- | |
| | அமைச்சுப்பணிகள் | | | |
| 1 | இளநிலை உதவியாளர் | தொழில் நுட்பக் கல்வி இயக்ககம் | 1 | தற்காலிக நியமனம் |
| 2 | இளநிலை உதவியாளர் | மாவட்டப் பதிவாளர் அரியலூர் | 1 | " |
| 3 | தட்டச்சர் | குடிமைப்பொருள் வழங்குதுறை | 1 | " |
| 4 | தட்டச்சர் | முதன்மை மாவட்ட நீதிபதி நாகர்கோவில் | 1 | " |
| 5 | தட்டச்சர் | முதன்மை மாவட்ட நீதிபதி இராமநாதபுரம் | 1 | " |
| 6 | தட்டச்சர் | மாவட்ட நீதிபதி செங்கல்பட்டு | 1 | " |
| 7 | தட்டச்சர் | முதல்வர் தொழில்நுட்ப பயிலகம் கோயம்புத்தூர் | 1 | " |
| 8 | தட்டச்சர் | மாவட்ட பதிவாளர் கோயம்புத்தூர் | 1 | " |
| 9 | தட்டச்சர் | மாவட்ட பதிவாளர் கரைக்குடி | 1 | " |
| 10 | சுருக்கெழுத்து தட்டச்சர் | மாவட்ட நீதிபதி குன்னூர் | 1 | " |
| 11 | சுருக்கெழுத்து தட்டச்சர் | முதன்மை மாவட்ட நீதிபதி செங்கல்பட்டு | 1 | " |
| 12 | சுருக்கெழுத்து தட்டச்சர் | முதன்மை மாவட்ட நீதிபதி உதகமண்டலம் | 1 | " |
| | | கூடுதல் | 12 | |

## பின் இணைப்பு - 11

### (தொடர்பு பகுதி - 7)


தேர்வாணையத்தின் கருத்துரையிலிருந்து அரசு மாறுபட்டது மற்றும் தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்கப்படாத வழக்குகளின் எண்ணிக்கை - கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான விவரங்கள்:

| வரிசை எண் | ஆண்டு | தேர்வாணையத்தின் கருத்தில் இருந்து மாறுப்பட்ட வழக்குகள் | தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்கப்படாத வழக்குகள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1998 - 1999 | 7 | - |
| 2 | 1999 - 2000 | 3 | - |
| 3 | 2000 - 2001 | 1 | - |
| 4 | 2001 - 2002 | 9 | 1 |
| 5 | 2002 - 2003 | 12 | 5 |


## ANNEXURE - XII / பின்இணைப்பு - XII

### DETAILS OF POST NOTIFIED AND VACANCIES IN THE LAST FIVE YEAR PERIOD
### கடந்த ஐந்து ஆண்டுகளில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் மற்றும் காலியிடங்களின் விவரம்


**NOTIFICATION**





**VACANCIES**




### NUMBER OF CANDIDATES SELECTED AND RECOMMENDED FOR APPOINTMENTS IN THE LAST FIVE YEAR PERIOD
### கடந்த ஐந்து ஆண்டுகளில் தெரிவு பெற்று பணி நியமனத்திற்காக பரிந்துரை செய்யப்பட்டோர் எண்ணிக்கை விவரம்





### WRITTEN EXAMINATIONS CONDUCTED IN THE LAST FIVE YEAR PERIOD
### கடந்த ஐந்து ஆண்டுகளில் நடத்தப்பட்ட எழுத்துத் தேர்வுகளின் எண்ணிக்கை விவரம்




## ANNEXURE - XII / பின்இணைப்பு - XII


### NUMBER OF CANDIDATES RECOMMENDED FOR APPOINTMENT BY RECRUITMENT THROUGH TRANSFER/PEROMOTION IN THE LAST FIVE YEAR
### கடந்த ஐந்து ஆண்டுகளில் பதவி. உயர்வு மற்றும் பணி மாற்றம் மூலம் பணி நியமனம் பெற பரிந்துரை செய்யப்பட்டோர் எண்ணிக்கை விவரம்




### DETAILS OF DISCIPLINARY CASES DISPOSED IN THE LAST FIVE YEAR PERIOD
### கடந்த ஐந்து ஆண்டுகளில் தீர்வு செய்யப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை வழக்குகள் எண்ணிக்கை விவரம்




### DETAILS OF ORAL TEST HELD IN THE LAST FIVE YEAR PERIOD
### கடந்த ஐந்து ஆண்டுகளில் நடத்தப்பட்ட வாய்மொழித் தேர்வுகளின் விவரம்



N.T.P. SUPPLIED BY THE DEPARTMENT
PRINTED AT GOVERNMENT CENTRAL PRESS, CHENNAI-600 079.